# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

2022 - 2023

மானியக் கோரிக்கை எண். 4

## என். கயல்விழி செல்வராஜ்

ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1–11 |
| I. | **ஆதி திராவிடர் நலன்** | 11 |
| 1 | கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் | 12–13 |
| 1.1 | பள்ளிகள் | 13–15 |
| 1.2 | கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் | 16–30 |
| 1.3 | கல்விக் கட்டணச் சலுகைகள் | 31–34 |
| 1.4 | பெண் கல்வி சிறப்பு ஊக்கத்தொகைத் திட்டம் | 35 |
| 1.5 | பரிசுத் தொகைத் திட்டம் | 36 |
| 1.6 | பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல் | 37 |
| 1.7 | சீருடைகள் வழங்குதல் | 38 |
| 1.8 | பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல் | 38–39 |
| 1.9 | மிதிவண்டிகள் வழங்குதல் | 39–40 |
| 1.10 | நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6 – ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம் | 40–41 |
| 1.11 | நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11 – ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம் | 41–43 |
| 1.12 | விடுதிகள் | 43–52 |
| 1.13 | அரசு ஆதி திராவிடர் தொழிற்பயிற்சி நிலையங்கள் | 52 |

| | | |
|---|---|---|
| 2 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | 53–54 |
| 3 | மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி | 54 |
| 4 | சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல். | 54–55 |
| 5 | ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 55–56 |
| 6 | ஈமச்சடங்கு உதவித் தொகை | 56 |
| 7 | ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP) | 56–59 |
| 8 | பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் | 60–61 |
| 9 | சாதிச் சான்றிதழ்கள் | 61–62 |
| 10 | 1955–ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், SC மற்றும் ST (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015 | 63–71 |
| 11 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் | 71–72 |
| 12 | டாக்டர். பி. ஆர். அம்பேத்கர் விருது | 72–73 |
| **II.** | **பழங்குடியினர் நலன்** | 74 |
| 1 | கல்வி | 76–77 |
| 1.1 | பள்ளிகள் | 77–79 |
| 1.2 | விடுதிகள் | 79–84 |
| 1.3 | கல்வி உதவித் தொகை | 85–92 |

| | | |
|---|---|---|
| 2 | ஒன்றிய அரசின் நலத்திட்டங்கள் | 93 |
| | அ. பிரதம மந்திரியின் பழங்குடியினர் கிராம முன்மாதிரித் திட்டம் (PMAAGY) | 93–94 |
| | ஆ இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1) | 94–95 |
| | இ. அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு | 95–96 |
| | ஈ. சிறுவன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம் | 96–99 |
| | உ. பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தை செயல்படுத்துதல் | 99–101 |
| | ஊ. பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் | 102–104 |
| 3 | மாநில அரசின் திட்டங்கள் | 104 |
| | அ விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | 104–106 |
| | ஆ. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | 106–107 |
| | இ. சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம் | 108 |
| | ஈ. தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs) | 108–109 |
| | உ. பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதி மேம்படுத்துதல் | 110–111 |
| 4 | பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல் | 111–114 |
| 5 | பழங்குடியினர் துணைத் திட்டம் | 114–117 |

| | | |
|---|---|---|
| **III.** | **தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)** | 118 |
| 1 | பங்கு மூலதனம் | 119 |
| 2 | தாட்கோவின் நடவடிக்கைகள் | 119 |
| 2.1 | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 119–131 |
| 2.2 | திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் | 131–134 |
| 2.3 | கட்டுமானப் பணிகள் | 135–138 |
| **IV.** | **நலக் குழுக்கள்** | 139 |
| | அ. மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு | 139–140 |
| | ஆ. தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் | 140–141 |
| **V.** | **தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம்** | 142 |
| **VI.** | **நல வாரியங்கள்** | 143 |
| | 1. புதிரை வண்ணார் நல வாரியம் | 143 |
| | 2. தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம் | 143–145 |
| | 3. பழங்குடியினர் நல வாரியம் | 145 |
| **VII.** | **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2022–2023–ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு** | 146 |

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு 2022 – 2023

## முன்னுரை:

**கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும் பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.**
**– தந்தை பெரியார்.**

பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியாரின் இவ்வரிகளை முழு மூச்சாகக் கொண்டு, சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்வடையச் செய்வதன் மூலம், சமத்துவ சமுதாயத்தினை உருவாக்கிடும் நோக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

## தொலை நோக்குத் திட்டம்

- சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் திட்டமிட்ட சமூக பொருளாதார மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் அம்மக்களின் நிலையினை உயர்த்தி அவர்களை சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வருதல்.

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணாக்கரின் கல்வி மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்துவதன் மூலம் அவர்களின் கல்வி தன்னம்பிக்கை, ஆளுமைத் திறன் போன்ற செயல்திறன்களை உயர்த்துதல்.

- 2030–ஆம் ஆண்டிற்குள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் குறிப்பாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் நலன் தொடர்பான ஒருங்கிணைந்த வளர்ச்சி இலக்கினை எட்டுதல்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூக–பொருளாதார நிலையினை

உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை திட்டமிடப்பட்ட முறையில் மேம்படுத்தும் வகையில் சமூக நலத்துறை 1988–ஆம் ஆண்டில் மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தனியாகத் தோற்றுவிக்கப்பட்டது. இம்மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகிய இரு திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாகவும் இத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இத்துறையின் கீழ், ஆதி திராவிட மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்தி அவர்கள் எதிர்கொள்ளும் சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஆதி திராவிடர் நல ஆணையரகம், பழங்குடியினர் நலன் குறித்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்திடும் பழங்குடியினர் நல இயக்குநரகம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தினை செயல்படுத்திடும் சமூக நீதி மற்றும் மனித உரிமை காவல் பிரிவு மற்றும் இம்மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு

உறுதுணையாக விளங்கிடும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) ஆகிய துறைத் தலைமை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மேலும், தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடி இனங்களின் மொழி மற்றும் கலாச்சாரம் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

ஆதி திராவிடர் நல ஆணையரகம் மூலமாக ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் கையாளப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், அவர்களது குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், வன உரிமைச் சட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகள் பழங்குடியினரின்

முன்னேற்றத்திற்காக பழங்குடியினர் நல இயக்குநரகம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் இவ்வின இளைஞர்களுக்கு சுயதொழில் / வேலை வாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல் ஆகிய பணிகள் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தால் (தாட்கோ) கையாளப்பட்டு வருகின்றன.

சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் இம்மக்களின் உரிமைகளை பாதுகாத்திடவும், அவர்களுக்கெதிராக நடைபெறும் வன்கொடுமைகளை தடுத்திடும் பொருட்டு இயற்றப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டத்தின் செயலாக்கத்தினை காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு கண்காணித்து வருகிறது.

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டபூர்வமான உரிமைகளை பாதுகாக்கவும், அவர்களது முக்கியமான பிரச்சனைகளுக்குத்

தீர்வு காணவும் தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டு இயங்கி வருகிறது.

1955–ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டத்தின் செயலாக்கத்தினைக் கண்காணித்திட **மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு** அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிரை வண்ணார் இன மக்களுக்கான நலத்திட்டங்களின் பயன் அச்சமுதாயத்தினருக்கு சென்றடைய **தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்**, பழங்குடியின மக்களின் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் அவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த **தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்** மற்றும் தூய்மைப் பணிபுரிவோருக்கான திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்திடும் **தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம்** ஆகிய நல வாரியங்கள் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

மேலும், இம்மாநிலத்தில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கான திட்டங்களை திட்டமிடவும் அவர்களது ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கான சிறப்பான ஆலோசனைகளை வழங்கிடவும், **தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்** எனும் அமைப்பும் செயல்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை உறுதி செய்திடும் வகையில், அவர்களது சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாத்திடும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு 2022-2023-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் **ரூ.4281.76 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்**

நீடித்த வளர்ச்சி இலக்குகள் என்பவை உலகளாவிய 17 குறிக்கோள்கள் மற்றும் 169 இலக்குகளின் முக்கியமான அங்கமாக விளங்குகின்றன. **"எவரும் விடுபடாமல் உள்ளடக்கிய வளர்ச்சி - 2030"** என்ற செயல்திட்டத்தின் அடிப்படையில், நெறிப்படுத்தப்பட்ட ஒழுங்கு முறையுடன் கூடிய வளர்ச்சித் திட்டங்களின் மூலம் மகத்தான

சாதனையை மனித குலம் எய்திட வழிவகுக்கப்பட்டுள்ளது. உலகப் பரிணாம வளர்ச்சி மாற்றத்தின் ஒரு அங்கமாக இந்த இலக்குகள் அமைந்துள்ளன.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கு:-**

ஐக்கிய நாடுகளின் சபை உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட "நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் 2030"-இன் செயல்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள **"எவரும் விடுபடாமல் உள்ளடக்கிய வளர்ச்சி"** எனும் மையக்கருத்து இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும்.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.14, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபா) துறை, நாள்.31.01.2020-இன் வாயிலாக நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் அலகு இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் (TSP) ஆகியவற்றில் கவனம் செலுத்தக்கூடிய ஆதி திராவிடர் துணைத் திட்ட நிதி

பயன்பாடு (குறிக்கோள் (10.4.1)) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்ட நிதி பயன்பாடு (குறிக்கோள் (10.4.2)) ஆகிய குறிக்காட்டிகள் அடங்கியுள்ளன. ஆதி திராவிடர் துணைத் திட்டம் [Scheduled Castes Sub Plan (SCSP)] மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் [Tribal Sub Plan (TSP)] ஆகியவற்றின் கீழ் அரசின் பல்வேறு திட்டங்களிலும் இம்மக்களின் பங்கேற்பை உறுதி செய்திடும் பொருட்டு அனைத்து துறைகளில் உள்ள திட்டங்கள் "ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்" என்ற இலக்கு 10–இன் குறிக்கோள் 10.4-ஐ நேரடியாக அடைய வழிவகுக்கப்பட்டுள்ளது.

**நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் செயற்பாட்டுக்குழு:–**

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்களையும், இலக்குகளையும், அடைவதற்கும் அதனை கண்காணிப்பதற்கும் ஒருங்கிணைப்புத் துறைகளின் செயலாளரை தலைவராக கொண்ட 8 செயல்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இலக்குகள் 1, 2 இலக்கு 4, இலக்கு 10 மற்றும் இலக்கு 16 ஆகியவற்றை அடையும் நோக்கில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, செயற்பாட்டுக்

குழுக்கள் 1, 3, 4 மற்றும் 8–இல் உறுப்பினராக உள்ளது. இலக்குகள் மற்றும் அவற்றின் சாதனைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக இச்செயல்பாட்டு குழுக்களால் காலமுறைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

**தேசிய மற்றும் மாநில குறியீடுகளின் கட்டமைப்பு:–**

ஆதி திராவிடர் துணைத் திட்டம் [Scheduled Castes Sub Plan (SCSP)] மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் [Tribal Sub Plan (TSP)] ஆகிய திட்டங்கள் தேசிய இலக்கின் குறியீடுகளாக அமைந்துள்ளன. இதற்கென ஒன்றிய அரசால் சிறப்பு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிதியுதவியை 100 விழுக்காடு பயன்படுத்துவதே இக்குறியீட்டின் இலக்காக அமைந்துள்ளது. தேசிய அளவில் சராசரியாக ஆதிதிராவிடர் மக்கள் தொகைக்கு 77.67 விழுக்காடும், பழங்குடினர் மக்கள் தொகைக்கு 82.98 விழுக்காடும், நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இலக்கு 10–ற்கான (ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்) குறியீட்டு எண்.85–ஐ கொண்டு தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. (ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான குறியீட்டு எண்.99 மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான குறியீட்டு எண்.85).

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளை மையப்படுத்தி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார அதிகாரமளித்தலைப் பரவலாக்க, இத்துறை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

## ஆதி திராவிடர் நலன்

சமூக நீதி என்பது அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியாகும். அனைத்து சமூகங்களையும் சமமாக வாழச்செய்வதன் மூலம் தமிழ்நாடு சமத்துவ சமுதாயமாக திகழ வேண்டும் எனும் குறிக்கோளுடன் இத்துறை இயங்கி வருகிறது.

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7.21 கோடியில், 20.01 விழுக்காடு (1.44 கோடி) ஆதி திராவிட மக்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் சமூக மறுப்புகளுக்கு ஆளான ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையை நன்கு உணர்ந்துள்ள இத்துறை அவர்களின் முன்னேற்றத்துக்கான பல்வேறு கொள்கைகள், நலத்திட்டங்கள், வரவு செலவுத்

திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

ஆதி திராவிட மக்களின் கல்வியறிவினை உயர்த்துவதே சமூக மாற்றத்திற்கு வித்தாக அமையும் என்பதால் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும், அவர்களை சமூக நீரோட்டத்தில் ஒன்றிணைக்கும் வகையில் பொருளாதார மேம்பாட்டிற்காக, வணிக நிறுவனங்களை அமைக்கவும் விவசாய நிலங்களை வாங்கி மேம்படுத்தவும் மானியத்துடன் கூடிய கடன்கள் வழங்கப்படுகின்றன. மேலும் தற்போதைய வேலைவாய்ப்புச் சந்தையில் அவர்களை திறன் பெற்றவர்களாக உருவாக்கும் வகையில் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

## 1. கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்.

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து."**

ஒரு பிறவியில் பெறும் கல்வி அறிவானது, ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பாக அமையும் எனும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, ஆதி திராவிட மக்களின் ஒட்டு மொத்த

வளர்ச்சிக்கு அடிப்படையான கல்வி மேம்பாட்டிற்கு இத்துறை உயர் முன்னுரிமையை அளிக்கிறது.

2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் ஆதி திராவிட மக்களின் கல்வியறிவு 73.26 விழுக்காடு ஆகும். இது ஏனைய பொதுப் பிரிவினரின் கல்வியறிவு விழுக்காடான 80.09 விழுக்காடு உடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளதை அறிந்து 2022-2023-ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.4,281.76 கோடியில் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டும் **ரூ.3571.39 கோடி** (83.41 விழுக்காடு) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1 . 1 பள்ளிகள்

ஆதி திராவிட மாணாக்கரின் கல்வியறிவு வளர்ச்சி விகிதம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றை உயர்த்திடும் பொருட்டு இத்துறை ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை சிறப்பாக நடத்துவதுடன், பல்வேறு கல்வி உதவித்தொகைத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 27,85,568 ஆதி திராவிட மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். (ஆதாரம்– ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை) ஆதி திராவிட மக்களின் கல்வித் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் அவர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1,138 பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**ஆதி திராவிடர் நலப்பள்ளிகளின் விவரம் 2021–2022**

| விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 833 | 20,437 | 19,772 | 40,209 |
| நடுநிலைப் பள்ளிகள் | 99 | 5,031 | 4,926 | 9,957 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 108 | 6,070 | 5,534 | 11,604 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 98 | 17,816 | 15,427 | 33,243 |
| **மொத்தம்** | **1,138** | **49,354** | **45,659** | **95,013** |

உயர்கல்விக்கான தேவையினை கருத்திற் கொண்டு மாணாக்கர் எண்ணிக்கை உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் அடுத்த உயர் நிலைக்கு நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள்,

அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர், கழிவறைகள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

2021–2022–ஆம் நிதியாண்டில் இத்துறையின் கீழ் இயங்கும் 150 ஆதி திராவிடர் நலப்பள்ளிகளுக்கு 480 புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 15 அறிவியல் ஆய்வகங்கள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.100.00 கோடி செலவில் ஏற்படுத்தித் தர ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், 51 ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு ரூ.87.00 இலட்சம் மதிப்பீட்டில் எதிர்மின்மாற்றிகள் (Inverters) வழங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்துறையால் நடத்தப்பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வித் தரத்தை உயர்த்திட ஏதுவாக இத்துறை பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அறிவுத் திறன் வகுப்பு, கையாளும் பயிற்சி (Practical Training), கணினி பயிற்சி போன்றவை பள்ளிக் கல்வித் துறையின் வழிகாட்டுதலின்படி நடத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 1.2 கல்வி உதவித் தொகை திட்டங்கள்

கல்வி உதவித் தொகையின் முதன்மையான நோக்கம் கல்விக்கு உறுதுணையாய் இருப்பதாகும். தகுதிவாய்ந்த ஆதி திராவிடர் இன மாணவர்கள் உயர் கல்வியில் மேம்பாடு அடையும் வகையில் இத்துறை கீழ்க்காணும் பல்வேறு கல்வி உதவித் தொகைகளுடன் கட்டணச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

### ஒன்றிய அரசு கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

#### (அ) ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்

உயர்கல்வியில் ஆதி திராவிடர் இன மாணாக்கர்களின் மொத்த சேர்க்கை விகிதத்தை உயர்த்திடும் நோக்குடன் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளை பயிலும் மாணாக்கர்கள் தமது கல்வியை பொருளாதாரத் தடையின்றித் தொடர ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் இக்கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புகளில் பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின் கீழ் கல்விக் கட்டணங்கள் மற்றும் கல்விப்படி (Academic allowances) ஆகியவை கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தினை செயல்படுத்த ஏற்படும் செலவினத் தொகை 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

**அடிப்படைத் தகுதிகள் :**

(அ) ஆதி திராவிட மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(ஆ) மாணாக்கர் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயில வேண்டும்.

**கல்விக் கட்டணங்கள்**

**(i) அரசு / அரசு உதவி பெறும் கல்வி நிலையங்கள்.**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு, கல்வி நிறுவனத்திற்கு அவர்களால்

செலுத்தப்பட வேண்டிய கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகிறது.

**(ii) சுயநிதிக் கல்வி நிலையங்கள்.**

சுயநிதிக் கல்வி நிலையங்களில் அரசு / நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழு நியமித்த கட்டணங்கள் / அரசு நிர்ணயிக்கும் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

சுயநிதிக் கல்லூரிகளிலுள்ள நிருவாக ஒதுக்கீடு இடங்களுக்கு ஒன்றிய அரசு விதித்துள்ள கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நேர்வுகளில் கல்வி உதவித் தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்:–

1) உரிய அதிகாரம் பெற்ற அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட கட்டண நிர்ணய / கட்டணம் வரன்முறைப்படுத்தும் குழுவால் அத்தகைய பாடப்பிரிவுகளுக்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும்.

2) விண்ணப்பங்களை வரவேற்க விளம்பரம் செய்தல், வரப்பெற்ற விண்ணப்பங்களின் தரப்பட்டியல் வெளியிடுதல், தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்களை தேர்வு செய்தல் ஆகிய நடைமுறைகளை உள்ளடக்கியவாறு ஒளிவுமறைவற்ற முறையில் அத்தகைய இடங்களுக்கான சேர்க்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

## இதர கல்விப் படி (Academic Allowance)

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு கல்விக் கட்டணங்கள் வழங்கப்படுவதுடன், இதர கல்வி சார்ந்த செலவினங்களுக்காக கல்விப்படியும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்பு வாரியான கல்விப்படித் தொகை விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன:–

| தொகுதி | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | பொறியியல், மருத்துவம், சட்டம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த தொழில் படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு, மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர் (CA/ICWA/CS/CFA etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (M.Phil, Ph.D., & Post Doctoral programmes) | 13,500/- | 7,000/- |
| II | 12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற் படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் (B.Sc.,(Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T etc., ) | 9,500 | 6,500 |

| தொகுதி | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான கல்விப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| III | தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் (B.A./ B.Sc./ B.Com./ M.A.,/ M.Sc./ M.Com., etc., ) | 6,000 | 3,000 |
| IV | 10–ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில் நுட்பப் பட்டயப் படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (XI, XII, ITI, தொழிற் பயிற்சிக் கல்வி etc.,) | 4,000 | 2,500 |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.1,110.23 கோடி மதிப்பிலான கல்வி உதவித் தொகை 6,93,634 மாணாக்கருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதி ஆண்டில் ரூ.1798.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) ஒன்றிய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்– ஆதி திராவிடர் மற்றும் பிற மாணாக்கர்கள் :–**

ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம் மற்றும் சுகாதாரத் தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே திட்டமாக செயல்படுத்தப்படும். 2022–2023 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் இரண்டு கூறுகளாக செயல்படுத்தப்படும்.

**திட்டக்கூறு –1:**

**ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கருக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்.**

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும்

ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**தகுதி:–**

மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**திட்டக்கூறு –2:**

**தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிபுரிவோரின் குழந்தைகளுக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் .**

1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும், தூய்மைப் பணி, தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களை பிரித்து சேகரித்தல் ஆகிய சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, சாதி, மத வேறுபாடு மற்றும் வருமான வரம்பின்றி இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பின்வரும் வீதத்தில் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது :–

| | வெளி மாணாக்கர் (Day Scholar) | விடுதி மாணாக்கர் (Hosteller) |
|---|---|---|
| | ( ஒரு ஆண்டுக்கு) (ரூபாய்) | |
| திட்டக்கூறு –1: | 3500/– (வகுப்பு 9–10) | 7000/– (வகுப்பு 9–10) |
| திட்டக்கூறு –2 | 3500/– (வகுப்பு 1–10) | 8000/– (வகுப்பு 3–10) |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில் 3,14,602 மாணாக்கருக்கு ரூ.92.20 கோடி மதிப்பிலான கல்வி உதவித் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2022–2023–ஆம் நிதியாண்டில் ரூ. 94.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மாநில அரசின் கல்வி உதவித் தொகை திட்டங்கள்

### (அ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள

விதிமுறைகளால் பயன்பெற இயலாத ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு உதவிடும் வகையில் மாநில அரசு சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையினை வழங்கி வருகிறது. இதற்கான 100 விழுக்காடு நிதியை மாநில அரசு வழங்குகிறது.

இத்திட்டத்திலும் ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணங்களும், கல்விப்படியும் உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றன.

**தகுதிகள்:–**

(அ) ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

(ஆ) மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்களது அகவிலைப்படி நீக்கி வருமானம் கணக்கிடப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.76.06 கோடி செலவில் 28,259 மாணாக்கருக்கு உதவித் தொகைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில், ரூ.85.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) மாநில அரசின் உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை திட்டம்

கட்டண விடுதிகளில் தங்கி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பட்ட மேற்படிப்பு பயிலும் ஆதி திராவிட மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் சிறப்பு உதவித்தொகை கீழ்க்கண்டவாறு வரவு வைக்கப்படுகிறது:–

| வ. எண் | படிப்புகள் | உதவித் தொகை (ஒரு ஆண்டுக்கு) |
|---|---|---|
| 1 | இளங்கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகள் மற்றும் பல்தொழில்நுட்ப பட்டயப் படிப்புகள் | ரூ.7,500/– |
| 2 | முதுகலை அறிவியல் பட்டப் படிப்புகள் மற்றும் இளங்கலை / முதுகலை தொழிற்படிப்புகள். | ரூ.8,000/– |

தகுதி:–

மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.6.43 கோடி செலவில் 8,181 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில், **ரூ.112.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) வெளிநாடுகளில் முதுகலைப்பட்டம் மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்

வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ள விரும்பும் ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரை ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆர்வமுள்ள பல மாணாக்கரை ஊக்கப்படுத்தும் பொருட்டு, தற்போது இத்திட்டம் இரண்டு திட்டப் பகுதிகளாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

## திட்டப் பகுதி -- I

வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் சேர்க்கையினை மேற்கொள்ளத் தேவையான TOEFL/ IELTS/ GRE / GMAT ஆகிய தகுதித் தேர்வுகளில் தேர்ச்சியுறும் பொருட்டு, மொத்தம் 500 மாணாக்கருக்கு பயிற்சி வழங்கப்படும்.

## திட்டப் பகுதி -- II

தகுதித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் தாம் விரும்பும் கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயில ஏதுவாக, ஆண்டுதோறும் 10 மாணாக்கருக்கு தாங்கள் விரும்பும் நாட்டின் கல்வி நிறுவனத்தில் உயர்கல்வியினைத் தொடர கல்வி உதவித்தொகை வழங்கப்படும். மாணவர்கள் பயிலக்கூடிய நாடு மற்றும் பயிலும் படிப்பினை பொறுத்து மாணவருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும், இக்கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.8.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்:**

1. இக்கல்வி உதவித்தொகை ஒரு குடும்பத்திற்கு ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.
2. TOEFL / IELTS / GRE/ GMAT ஆகிய 4 தகுதித் தேர்வுகளில், ஏதாவது ஒரு தேர்வுக்கான பயிற்சியை பெறுவதற்கு மாணாக்கர் அனுமதிக்கப்படுவர்.

இத்திட்டத்தை செயல்படுத்துவற்காக 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.5.57 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) முழு நேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத்தொகை**

இந்த ஊக்கத் தொகை ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின ஆய்வு மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம், இலக்கியம், அரசியல் அறிவியல் ஆகிய பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை அதிகரிக்கும் வகையிலும்,

இவ்வாய்வுகளில், ஈடுபடும் ஆய்வு மாணாக்கரை பொருளாதார ரீதியாக ஊக்குவிக்கும் வகையிலும் இக்கல்வி உதவித் தொகைத் திட்டம் 2021–2022–ஆம் நிதியாண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது:

1. இது வரையில் வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ஆண்டிற்கு ரூ.50,000/–இல் இருந்து ரூ.1,00,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
2. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணாக்கர் எண்ணிக்கை 1,200– இல் இருந்து 1,600– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
3. மேலும், இக்கல்வி உதவித் தொகையை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.8.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது

இத்திட்டத்திற்காக 2022–2023–ஆம் நிதியாண்டில் **ரூ.16.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1 . 3 கல்விக் கட்டண சலுகைகள்

### (அ) கற்பிப்புக் கட்டண சலுகை

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் அனைவரும், வருமான உச்ச வரம்பின்றி, கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.6.29 கோடி மதிப்பில் 12,886 மாணாக்கருக்கான கற்பிப்புக் கட்டணம் அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில், **ரூ.7.51 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டண சலுகை

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும்

ஆதி திராவிடர் மற்றும் கிறித் வ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் அனைவரும், வருமான உச்ச வரம்பின்றி, சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.12.56 இலட்சம் மதிப்பீட்டில், 582 மாணாக்கர் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில், **ரூ.13.00 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) முதுகலை பட்டப் படிப்பு பயிலும் மாணவியருக்கு சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டண சலுகை

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவியர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் நிதியாண்டில், ரூ.3.00 இலட்சம் மதிப்பில் 50 மாணவியருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் அரசால் செலுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022-23-ஆம் நிதியாண்டில், **ரூ. 6.30 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (ஈ) பள்ளி மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் கற்பிப்புக் கட்டண சலுகை

ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கரும் சிறப்புக் கட்டணம் மற்றும் கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக விடுவிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் நிதியாண்டில், ரூ.25.47 இலட்சம் செலவில் 46,705 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022-23-ஆம் நிதியாண்டில், **ரூ. 45.00 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (உ) இதர கட்டணங்களிலிருந்து விலக்கு

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 10, 11 மற்றும் 12–ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு நேரடியாக அரசுத் தேர்வுகள் இயக்குநரகத்திற்கு வழங்கப்படுகிறது.

இது மட்டுமன்றி, இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி படிப்புகளுக்கான விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டு, இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.2.34 கோடி செலவில் 1,73,543 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில், ரூ.2.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.4 பெண் கல்வி சிறப்பு ஊக்கத் தொகைத் திட்டம்

சமத்துவம் மற்றும் சமூக நீதியின் ஒரு முக்கியமான அங்கமாக பெண்கல்வி விளங்குவதை உணர்ந்துள்ளதன் காரணமாக, பெண்கல்வி சிறப்பு ஊக்கத் தொகைத் திட்டத்தினை இத்துறை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆதி திராவிட மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும், அவர்களது இடை நிற்றலை (Drop out) குறைப்பதற்காகவும், ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வகுப்பு | தொகை (ஆண்டொன்றுக்கு) (ரூபாயில்) |
|---|---|
| 3 முதல் 5 வரை | 500/– |
| 6 | 1000/– |
| 7 மற்றும் 8 | 1500/– |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.37.14 கோடி செலவில் 3,98,275 மாணவியருக் ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் ரூ.45.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.5 பரிசுத் தொகைத் திட்டம்

உயர்கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியுறும் மாணாக்கரை ஊக்குவிக்கும் விதமாக, இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி பட்டப்படிப்புத் தேர்வுகளில் 60 விழுக்காட்டுக்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1000 ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:–

| படிப்பு | தொகை (ஒருவருக்கு) (ரூபாயில்) | பரிசு பெறும் மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| இளங்கலை | 3000/– | 500 |
| முதுகலை | 5000/– | 300 |
| தொழிற் படிப்பு | 6000/– | 200 |

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில், **ரூ.42.00 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.6 பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

ஆதி திராவிடர், கிறித் வ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் கல்வி நலன் மற்றும் அவர்தம் பெற்றோரின் நிதிச்சுமையினை கருத்தில் கொண்டு இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு பாடப்புத்தகங்களும், 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறை மூலமாக வழங்கப்படுகின்றன.

மேலும், 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.0.74 கோடி செலவில் 10–ஆம் வகுப்பில் பயிலும் 14,198 மாணாக்கருக்கும் மற்றும் 12–ஆம் வகுப்பில் பயிலும் 12,243 மாணாக்கர்களுக்கும் சிறப்பு வழிகாட்டி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.11.50 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.7 சீருடைகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் இத்துறையால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தைத்து வழங்கப்படுகின்றன.

2021–2022–ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.12.99 கோடி செலவில் 29,462 மாணவர்களுக்கும் மற்றும் 20,610 மாணவியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.13.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.8 பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

தற்போது நிலவும் கடும் போட்டி மிகுந்த சூழ்நிலையில் பள்ளி / கல்லூரிகளில் கற்பிக்கப்படும் பாடங்களுடன் கூடுதலாக மாணாக்கர் தமது பொது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்வது அவசியமாகும். இந்நோக்கில், பல்வேறு பிரிவுகளில் மாணவர்களது பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப்பணி தேர்வுகள்

உள்ளிட்ட இதர போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள தயாராகும் வகையிலும், இத்துறையால் நடத்தப்படும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு வாங்கி வழங்கப்படுகின்றன:–

| வ. எண் | பள்ளிகள் / விடுதிகள் | நூலக புத்தகங்கள் | பருவ இதழ்கள் |
|---|---|---|---|
| | | ( ஆண்டு ஒன்றுக்கு) (ரூபாயில்) | |
| 1. | உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள் | 1,000 | 450 |
| 2. | பள்ளி விடுதிகள் | -- | 450 |
| 3. | கல்லூரி விடுதிகள் | -- | 3,100 |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.12.68 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.13.74 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.9 மிதிவண்டிகள் வழங்குதல்

தொலைதூர கிராமங்களில் இருந்து கல்விப் பயிலும் மாணவ / மாணவியருக்கு போக்குவரத்து ஒரு தடையாக

இருக்கக் கூடாது. இதன் நிமித்தம் அவர்களது கல்வியில் இடைநிற்றல் ஏற்படாத வகையில் அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு நிதியுதவி பகுதியாக பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், 11–ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.65.40 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.10 நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் 6–ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்த்தல்

அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் சிறந்த முறையில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தரும் நோக்கத்துடன் இத்திட்டம் 2008–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், அரசு உதவி பெறும் பள்ளிகளில் 5–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு, அனைவருக்கும் கல்வித் திட்ட (SSA) அலுவலரின் உதவியுடன் சிறப்புத் தேர்வு ஒன்றினை

நடத்தி அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கருள், வட்டாரத்திற்கு (Block) ஒருவர் வீதம் 385 வட்டாரங்களில் இருந்து 385 மாணாக்கரை தேர்வு செய்து, அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரை பெற்று, சிறந்த தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6–ஆம் வகுப்பில் சேர்த்து, அவர்கள் தொடர்ந்து 12–ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஆகும் செலவினத்தை அரசே ஏற்றுக் கொள்கிறது.

2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.8.70 கோடி செலவில் 1,836 மாணாக்கர் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.13.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.11 நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம்.

அரசு / அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் சிறந்த முறையில் தேர்ச்சி பெறும் மாணவர்களை நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் சேர்க்கும் இத்திட்டம் 2007–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் / ஆதி திராவிடர் நல

பள்ளிகள் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி, மாநகராட்சி, நகராட்சி, பள்ளிகளில் கல்வி பயின்று 10–ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சிப் பெறும் 10 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர், இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு சிறந்த தனியார் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், இணையதளத்தின் வாயிலாக அல்லது முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த சிறந்த மதிப்பெண் பெற்ற 10 மாணாக்கரின் பெயர்ப் பட்டியலைப் பெற்று, அதே மாவட்டம் அல்லது அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் அவர்களைச் சேர்த்து, அவர்களுக்கான கல்விக் கட்டணம் அந்தக் கல்வி நிலையங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது. ஒரு மாணாக்கருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.28,000/– வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.56,000/– அரசு செலவிடுகிறது.

**தகுதி:**

பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.44.00 இலட்சம் செலவில் 11 ஆம் வகுப்பில் 56 மாணக்கர்களும் மற்றும் 12–ஆம் வகுப்பில் 164 மாணக்கர்களும் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதி ஆண்டில் **ரூ.2.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.12 விடுதிகள்

ஊரகப் பகுதிகளிலும், தொலைதூர கிராமப் புறங்களிலும் வசிக்கும் மாணாக்கர் கல்வி பயில போக்குவரத்து ஒரு தடையாக இருக்கக் கூடாது என்னும் அடிப்படையில் அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகில் இத்துறையால் ஆதி திராவிடர் நல விடுதிகள் நடத்தப்படுகின்றன. இவ்விடுதிகள் ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கரின் இடைநிற்றலைத் தவிர்த்து அவர்கள் தொடர்ந்து கல்விப் பயில வழிவகை செய்கின்றன.

இத்துறையின் கீழ் இயங்கி வரும் ஆதி திராவிடர் நல விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:–

## ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம் (2021–2022)

| விடுதியின் வகை | விடுதிகளின் எண்ணிக்கை | | | மாணாக்கரின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பள்ளி விடுதிகள் | 738 | 403 | 1,141 | 53,881 | 28,530 | 82,411 |
| கல்லூரி விடுதிகள் | 67 | 78 | 145 | 7,676 | 5,699 | 13,375 |
| ஐ.டி.ஐ. விடுதிகள் | 15 | 2 | 17 | 1,256 | 116 | 1,372 |
| பாலிடெக்னிக் விடுதிகள் | 3 | 2 | 5 | 178 | 110 | 288 |
| முதுகலைப் பட்டதாரி கல்லூரி விடுதிகள் | 9 | 6 | 15 | 693 | 315 | 1,008 |
| சட்டக் கல்லூரி விடுதிகள் | 1 | 0 | 1 | 55 | 0 | 55 |
| **மொத்தம்** | 833 | 491 | 1,324 | 63,739 | 34,770 | 98,509 |

- அரசாணை (நிலை) எண்.91, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை, நாள் 22.11.2021–இன்படி, கடலூர் மாவட்டம்– விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களில் தலா ஒரு விடுதியில் 50 மாணவியர் தங்கி கல்வி பயிலும் வகையில் 3 கல்லூரி விடுதிகள் துவங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள காபி/ தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களின் குழந்தைகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக தேனி மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (160 மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## அ. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் :–

(i) கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் மற்றும் ஜமுக்காளம்.

(ii) நீராவி கொதிகலன்கள்.

(iii) குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், மற்றும் மின்னணு எடை இயந்திரங்கள்.

(iv) ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் மற்றும் சுகாதாரக் குட்டை தகளிகள்.

(v) மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டி.

(vi) நூலக வசதி

(vii) சமையல் எரிவாயு இணைப்பு.

(viii) செய்தித்தாள்கள்.

(ix) பாய், போர்வை மற்றும் உறையுடன் கூடிய தலையணைகள்.

(x) எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்.

(xi) கல்லூரி விடுதிகளுக்கு "இந்தியா இயர் புத்தகம்", மற்றும் "திட்டம்" மாத இதழ்.

மேலும், 2021–2022–ஆம் நிதியாண்டில் 512 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு ரூ.46.00 இலட்சம் செலவில் மின் அரைப்பான்கள் வாங்கி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## ஆ. உணவு மற்றும் சில்லரைச் செலவினங்கள்

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கருக்கு ஒவ்வொரு மாதமும் உணவுக் கட்டணமும், மேலும், சோப்பு, எண்ணெய், சிகைக்காய் வாங்குதல் மற்றும்

முடி வெட்டுதல் போன்ற சில்லரைச் செலவினங்களுக்கான கட்டணமும் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது.

இச்செலவினம் ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக திருத்தியமைக்கப்படவில்லை. தற்போது நிலவிவரும் பொருளாதார சூழலைக் கருத்தில் கொண்டு, சில்லரைச் செலவினத்திற்கான கட்டணத்தை 2021–2022–ஆம் ஆண்டிலிருந்து பள்ளி மாணாக்கருக்கு ரூ.50/–லிருந்து ரூ.100/– ஆகவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.75/–லிருந்து ரூ.150/– ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

அது போன்று, ஆதி திராவிடர் நல விடுதி மாணாக்கருக்கு பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய விழா நாட்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணமும், 2021–2022–ஆம் நிதியாண்டிலிருந்து பள்ளி மாணாக்கருக்கு ரூ.20/–லிருந்து ரூ.40/–ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு ரூ.40/–லிருந்து ரூ.80/–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படும் திருத்தப்பட்ட கட்டணங்களின் விவரம் பின்வருமாறு:–

| **கட்டணங்களின் வகைகள்** | **பள்ளி விடுதி மாணாக்கர்** | **கல்லூரி விடுதி மாணாக்கர்** |
|---|---|---|
| உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) | ரூ.1,000/– | ரூ.1,100/– |
| சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய், சிகைக்காய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு) | ரூ.100/– | ரூ.150/– |
| சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்) | ரூ.40/– | ரூ.80/– |

# பள்ளி விடுதி – வாராந்திர உணவுப் பட்டியல்

| கிழமை | காலை சிற்றுண்டி | நண்பகல் உணவு | மாலை | இரவு உணவு |
|---|---|---|---|---|
| திங்கள் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, இஞ்சி இரசம், பொரியல், முட்டை(1) |
| செவ்வாய் | பொங்கல், சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1) |
| புதன் | எலுமிச்சை சாதம், துவையல் | சாதம், மட்டன் (80 கிராம்)/சிக்கன் (100 கிராம்) குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, இரசம் |
| வியாழன் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை (1) |
| வெள்ளி | பொங்கல், சட்னி | சாதம், மோர்க்குழம்பு, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை (1) |
| சனி | இட்லி, சட்னி | சாதம், சாம்பார், கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1) |
| ஞாயிறு | இட்லி, சாம்பார் | சாதம், சாம்பார், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், தக்காளி சூப், பொரியல், இரசம் |

# கல்லூரி விடுதி – வாராந்திர உணவுப் பட்டியல்

| கிழமை | காலை சிற்றுண்டி | நண்பகல் உணவு | மாலை | இரவு உணவு |
|---|---|---|---|---|
| திங்கள் | பொங்கல், சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை(1) |
| செவ்வாய் | இட்லி, சாம்பார் | சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், பொரியல், இரசம் முட்டை(1), |
| புதன் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், மட்டன் (80 கிராம்) /சிக்கன் (120 கிராம்) குருமா, பொரியல் மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், தக்காளி சூப், பொரியல், இரசம் |
| வியாழன் | எலுமிச்சை சாதம், துவையல் | சாதம், குழம்பு, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை(1) |
| வெள்ளி | ரவை கிச்சடி, சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், இரசம், பொரியல், மோர், முட்டை (1) |
| சனி | இட்லி, சாம்பார் | சாதம், சாம்பார், கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், இரசம், மோர், முட்டை (1) |
| ஞாயிறு | பொங்கல், சட்னி | சாதம், காய்கறி குருமா, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | இட்லி, சாம்பார். |

## இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

### (i) விடுதிகள்:–

அரசு மட்டுமல்லாது இம்மக்களுக்காக சேவை செய்து வரும் 15 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 23 விடுதிகளில் தங்கிப்பயிலும் 4,659 ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறை மூலம் வழங்கப்படுகின்றன.

### (ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்:

தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை ஆதி திராவிடர் மாணாக்கருக்காக பள்ளி ஒன்றை நடத்தி வருகிறது. இப்பள்ளியில் 4,320 மாணாக்கர் பயின்று வருகின்றனர். மேலும், 2 விடுதிகள் இந்த அறக்கட்டளையால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளி மற்றும் விடுதிகளில் பணிபுரியும் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக 2006–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.9.93 கோடி செலவில் மொத்தம் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் ரூ.9.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.13 அரசு ஆதி திராவிடர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

ஆதி திராவிட மாணாக்கர் தொழிற்கல்வி பயிலும் வகையில் பின்வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆதி திராவிட மாணவர்களுக்கென பிரத்தியேகமாக செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர் | மாணாக்கரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கடலூர் | சிதம்பரம் | 252 |
| 2. | திருவள்ளூர் | வடகரை | 195 |
| மொத்தம் | | | 447 |

## 2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வீடற்ற ஆதி திராவிட மக்களின் சமூக நிலையினை உயர்த்தும் நோக்கில் அவர்கள் தமக்கென சொந்த வீட்டினை கட்டிக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பட்டாக்கள் வழங்குவதற்கான நிலம் தனியார் பேச்சுவார்த்தை மூலம் அல்லது நில எடுப்புச் சட்டங்களின் மூலம் கையகப்படுத்தப்படுகிறது. தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியப்பட்டு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கீழ்க்கண்டவாறு உள்ளாட்சிப் பகுதிகளில் வழங்கப்பட்டு வருகின்றன:–

| பகுதி | வழங்கப்படும் இடத்தின் அளவு | பயனாளியின் ஆண்டு வருமான வரம்பு |
|---|---|---|
| கிராமப்புறம் | 3 சென்ட் | ரூ.72,000/– |
| நகராட்சி | 1 ½ சென்ட் | |
| மாநகராட்சி | 1 சென்ட் | |

2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.3.68 கோடி செலவில் 709 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதி ஆண்டில் மொத்தம் **ரூ.6.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுத்திடும் திட்டத்தின் கீழ் இத்துறை ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.75.84 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்பாட்டில் கொண்டிருக்கும் கிராமங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்.

சமூக ஒற்றுமையை ஊக்குவிக்கும் முயற்சியாக, சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் பயன்பாட்டில் உள்ள முன்மாதிரி சிற்றூர்களுக்கு அதன் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஊக்கத் தொகையாக ரூ.10.00 இலட்சம் பரிசு வழங்கும் புதிய திட்டத்தை இத்துறை 2021–2022–ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது.

2021–22–ஆம் நிதியாண்டில், 37 மாவட்டங்களுக்கு (சென்னை நீங்கலாக) சாதி வேறுபாடுகளற்ற, மயான நடைமுறைகளில் உள்ள, மாவட்டத்திற்கு 3 சிற்றூர்கள் வீதம் மொத்தம் 111 சிற்றூர்களுக்கு பரிசுத் தொகையாக ரூ.14.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சிற்றூர்களுக்கு தலா ரூ.10.00 இலட்சம் வீதம் ரூ.6.00 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு **ரூ.8.10 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

ஆதி திராவிடர் குடியிருப்புகள் அனைத்தும் குடிநீர், சாலைகள், மின்சாரம் முதலிய அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட தன்னிறைவு பெற்ற கிராமங்களாக விளங்குவதை உறுதி செய்திடும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காவல் துறை கூடுதல் இயக்குநர் மூலமாக வன்கொடுமை நிகழும் கிராமங்கள் எவை என கண்டறியப்பட்ட கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதியாண்டிற்கு **ரூ.100.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. ஈமச்சடங்கு உதவித்தொகை

சமூகத்தின் விளிம்பு நிலையில் வசிக்கும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பங்களில் நிகழும் துக்க நிகழ்வுகளின் போது ஈமச்சடங்குகளை நிறைவேற்றுவதற்கும், அதற்கான எதிர்பாராச் செலவுகளை மேற்கொள்ளவும் ரூ.5,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.9.95 கோடி மதிப்பிலான இவ்வுதவித்தொகை 19,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022-23-ஆம் நிதியாண்டிற்கு ரூ.9.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP)

மாநிலத்தின் மொத்தத் திட்ட நிதியிலிருந்து தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் மக்கள் தொகை விகிதத்திற்கு (20.01 விழுக்காடு) இணையாக நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் வழியாக ஆதி திராவிட மக்களை சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் இதர பிரிவினருக்கு இணையாக உயர்த்திட வழிவகுக்கும் ஆதி திராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-1981-ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-2023-ஆம் நிதியாண்டின் மாநில திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம் - Welfare Expenditure of State) ரூ.74,892.56 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் (ஆதி திராவிடர் நலத்திட்ட செலவினம் - Expenditure on Scheduled Castes Welfare) கீழ் ரூ.16,442.08 கோடி (21.95 விழுக்காடு) மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் இன மக்கள் தொகை விழுக்காட்டை (20.01 விழுக்காடு) விட அதிகமானதாகும்.

ஆதி திராவிடர் துணைத்திட்டத்தில், பின்வரும் 14 பிரிவுகளின் கீழ் 48 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 20 செயலாக்கத் துறைகள் வாயிலாக ஆதி திராவிடர் மக்களின் மேம்பாடு மற்றும் நலனுக்காக திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2022–23 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் துணைத்திட்டத்தின் கீழ் பிரிவு (SECTORAL) வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம்

( ரூ.கோடியில்)

| வ. எண் | பிரிவு | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 3,730.40 |
| 2 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி | 3,077.80 |
| 3 | ஊரக வளர்ச்சி | 2,744.16 |
| 4 | சமூகநலன் மற்றும் சத்துணவு | 2,272.26 |
| 5 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு | 1,220.00 |
| 6 | வேளாண்மையும் தொடர்பான நடவடிக்கைகளும் | 1,133.16 |
| 7 | கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாடு | 1,023.81 |
| 8 | மக்கள் நல்வாழ்வு – குடும்ப நலன் | 795.08 |
| 9 | போக்குவரத்து | 197.00 |
| 10 | பொதுவான பொருளாதாரப் பணிகள் | 149.50 |

| | | |
|---|---|---|
| 11 | தொழிலாளரும் தொழிலாளர் நலனும் | 56.46 |
| 12 | சிறப்பு பகுதித்திட்டங்கள் | 30.75 |
| 13 | தொழிலும் கனிமங்களும் | 7.90 |
| 14 | ஏனைய சமூகப்பணிகள் | 3.80 |
| **மொத்தம்** | | **16442.09** |

ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் கீழ் அவர்களது நலனுக்காக தீட்டப்படும் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திட செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

மாநில அளவில் இத்துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களைத் தீட்டுவதற்கும் செயல்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal Department) இத்துறை விளங்குகிறது. இத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்ட அளவில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிடர் நல ஆணையர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 8. பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் (Pradhan Mantri – Anusuchit Jaati Abhyuday Yojana – PMAJAY)

2021-2022-ஆம் ஆண்டு முதல் ஏற்கனவே இயங்கி வரும் பிரதம மந்திரியின் முன்னோடி கிராமத் திட்டம் (Pradhan Mantri Adarsh Gram Yojana-PMAGY), ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (Special Central Assistance to Scheduled Castes Sub Plan – SCA to SCSP), பாபு ஜெகஜீவன்ராம் விடுதி கட்டும் திட்டம் (Babu Jagjivan Ram Chatrawaas Yojana-BJRCY) ஆகிய மூன்று திட்டங்களை ஒருங்கிணைத்து பிரதம மந்திரியின் ஆதி திராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் (Pradhan Mantri – Anusuchit Jaati Abhyuday Yojana – PMAJAY) எனும் புதிய திட்டமாக ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிராம முன்னோடித் திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் நிதியாண்டில் 1,357 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசால் ரூ.146.38 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும்,

ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசால் ரூ.153.28 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

## 9. சாதிச் சான்றிதழ்கள்

### (i) சாதிச்சான்று வழங்குதல்

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் மக்கள் தொகையின் அடிப்படையில் முறையான பங்கேற்பு அளிக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையில் ஆதி திராவிடர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியரால் ஆதி திராவிடர்களுக்கு சாதிச்சான்று வழங்க மறுக்கப்படும் பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அல்லது சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதுடன், அதன்பிறகு குறைகள் நீடிப்பின் அவற்றினை நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகலாம்.

### (ii) சாதிச்சான்றுகளின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

சில நேர்வுகளில் போலியான சான்று அளித்து இதர இனத்தவர்கள் கல்வி நிறுவனங்களில் சேர்தல், பொதுப்

பணிகளில் நியமனம் பெறுதல் மூலம் உண்மையான ஆதி திராவிட மக்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆதி திராவிட மக்களின் உரிமைகளை பாதுகாத்திடும் பொருட்டு ஆதி திராவிடர் சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழுக்கள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன:–

**மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு**

<table>
<tr><td>1</td><td>மாவட்ட ஆட்சியர்</td><td>தலைவர்</td><td rowspan="3">ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226–ன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136–ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.</td></tr>
<tr><td>2</td><td>மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்</td><td>உறுப்பினர்–செயலர்</td></tr>
<tr><td>3</td><td>மானுடவியல் வல்லுநர்</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

## 10. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 17–வது பிரிவு தீண்டாமையை ஒழித்து, அதை எந்த வடிவத்திலும் செயல்படுத்துவதைத் தடை செய்துள்ளது. தீண்டாமையின் மூலம் எவ்வித ஊறு விளைவிப்பதும் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

தீண்டாமையை ஒழிக்கவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்கவும், இத்தகைய குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கவும், வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்கவும், இந்திய அரசால் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 மற்றும் 2018

ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டு, அவை தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கூடுதல் காவல்துறைத் தலைவர் தலைமையின் கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இந்த இரு சட்டங்களின் கீழ் வழக்குகள் பதிவு செய்தல், புலன் விசாரணை, வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வது மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்குவதும் இப்பிரிவின் பணிகளாகும்.

## (அ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறுகள் 17 மற்றும் 35(a)(ii)–இன்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் மறுவாழ்வு தொடர்பான வழக்குகளை விரைந்து முடிக்க ஏதுவாக திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம், சிவகங்கை, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூர்),

புதுக்கோட்டை, கடலூர், நாமக்கல், தேனி, திருவண்ணாமலை, பெரம்பலூர், வேலூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி (நாகர்கோவில்), காஞ்சிபுரம் (செங்கல்பட்டு), திருப்பூர், திருவாரூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 22 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்காணும் தனியுறு சிறப்பு நீதிமன்றங்களில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் நிலுவையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு சேலம், கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நான்கு புதிய தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் தொடங்கப்பட உள்ளன.

இதர மாவட்டங்களில் இவ்வழக்குகளை விசாரணை செய்ய தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதை மாநில அளவில் ஒரு கூடுதல் காவல்துறை இயக்குநர், காவல் துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணை

கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் மேற்பார்வையில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

(i) இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் 1995–ஆம் ஆண்டைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995, திருத்த விதி 2016 மற்றும் திருத்த விதி 2018–இல் விதி 16–இன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு 20.07.2021 அன்று திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் 19.08.2021 அன்று நடைபெற்றது. 2022–ஆம் ஆண்டிற்கான இக்குழுவின் கூட்டம் 12.04.2022 அன்று நடைபெற்றது.

(ii) மேலும் விதி எண்.17(1)–இன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 5 அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட

அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பிரச்சனைகளை நன்கு அறிந்தவர்களை உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப் பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளித்தது குறித்தும், இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யும்.

(iii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995, விதி எண் 17(A)–இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, மாவட்டங்களில் உள்ள அனைத்து உட்கோட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு

அமைப்பதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு அதன்படி அனைத்து மாவட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரை சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வு பயிற்சிகள் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு **"சமத்துவம் காண்போம்"** என்கிற தலைப்பில் நடத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், வன்கொடுமையால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கேற்றவாறு குறைந்தபட்சம் ரூ.85,000/- முதல் அதிகபட்சம் ரூ.8.25 இலட்சம் வரை தற்போது வழங்கப்பட்டு வரும் தீருதவித் தொகையினை குறைந்த பட்சம் ரூ.1.00 இலட்சம் முதல் அதிகபட்சம் ரூ.12.00 இலட்சம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

2021–2022–ஆம் நிதியாண்டில், 3,241 பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ரூ. 29.98 கோடி மதிப்பிலான தீருதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2022–2023–ஆம் நிதியாண்டில் **ரூ.35.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தீண்டாமைக்கெதிராக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24–ஆம் தேதி முதல் 30–ஆம் தேதி வரை "மனிதநேய வார விழா" நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மனிதநேய வார விழா நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/– மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/– நிதி வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் மூலம் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இது தவிர, ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமத்துவ விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமத்துவ விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் நிதியாண்டில், ரூ.2.65 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022-23-ஆம் நிதியாண்டில் **ரூ.1.11 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

தமிழ்நாட்டின், அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர்த்து) தீண்டாமை கடைபிடிக்கப்படாத, பொது மக்கள் நல்லிணக்கத்துடன் கூடி வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022-ஆம் நிதியாண்டில், ரூ3.40 கோடி செலவில் 34 மாவட்டங்களில் உள்ள 34 கிராமங்கள் பயனடைந்துள்ளன.

இத்திட்டத்திற்கென 2022-23-ஆம் நிதியாண்டில், **ரூ.3.60 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. தமிழ் நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்த ஆய்வுகளுக்கு உதவிடவும், இச்சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, இலக்கிய படைப்புகளை ஊக்குவிக்கவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுப் பணி அமைப்பினை தமிழ்நாடு அரசு 2003-ஆம் ஆண்டு உருவாக்கியது. 2015-ஆம் ஆண்டில் இவ்வமைப்பு சங்கமாக பதிவு செய்யப்பட்டு தமிழ் நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இப்பணிக்கான தனி பணிக்குழு நிதியாக (Corpus Fund) ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டு வைப்புத் தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இந்த வைப்புத்

தொகைக்காகப் பெறப்படும் வட்டித்தொகை, கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகிய பொருண்மைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை வழங்க பயன்படுத்தப்படுகிறது.

ஆண்டுதோறும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காக தேர்வு செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சார்ந்த ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனங்களைச் சார்ந்த 10 எழுத்தாளர்கள் மற்றும் இச்சமூகங்களின் பிரச்சனைகள் குறித்து எழுதும் இதர இனங்களைச் சேர்ந்த ஒரு எழுத்தாளர் என மொத்தம் 11 எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.50,000/- பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. இப்பரிசுத் தொகையில் 50 விழுக்காட்டுத் தொகை படைப்புகளை புத்தகமாக வெளியிட முன்பணமாகவும், எஞ்சிய 50 விழுக்காட்டுத் தொகையினை பணியை முடித்த பின்பும் வழங்கப்படுகிறது.

## 12. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் விருது.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக அயராது உழைத்த, சமத்துவம் மற்றும் சமூக நீதியின்

முன்னோடியான அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் போற்றும் வகையில் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் தொண்டாற்றிய ஒருவருக்கு "டாக்டர் அம்பேத்கர் விருது" 1995–ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் டாக்டர்.அம்பேத்கர் விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுடன் பரிசுத் தொகையாக ரூ.1,00,000/–க்கான காசோலை, தகுதியுரை மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2022–ஆம் ஆண்டிலிருந்து பரிசுத் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

2021–ஆம் ஆண்டிற்கான "டாக்டர் அம்பேத்கர் விருது" மேனாள் நீதியரசர் திரு கே.சந்துரு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

## II. பழங்குடியினர் நலன்

2011–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 36 வகையான உட்பிரிவுகளைச் சார்ந்த 7,94,697 பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இது மாநில மொத்த மக்கள் தொகையில் 1.10 விழுக்காடு ஆகும்.

சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் பின்தங்கிய நிலையில் உள்ள பழங்குடியின மக்கள் அடிப்படை வசதிக் குறைபாடு, வனவளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடப்பெயர்வு, ஊட்டச்சத்துக் குறைபாடு, பொருளாதார வாய்ப்புகள் இல்லாமை மற்றும் குறைந்த கல்வியறிவு ஆகிய சிக்கல்களை சந்திக்கின்றனர். இச்சிக்கல்களுக்கான தீர்வுகளை அளிப்பதன் மூலம், அவர்களது சமூக, பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சியினை உறுதி செய்து அவர்களை சமூக நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதே இத்துறையின் குறிக்கோளாகும்.

அரசால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் பழங்குடியினரின் கலாச்சாரம் மற்றும் பண்பாடுகளின் மீது சரியான புரிதலுடன், அவர்கள் எதிர்கொள்ளும் சமூக, உளவியல் மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கான தீர்வுகளை தருவனவாக உருவாக்கப்பட வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து, அதிக கவனத்துடன் அவர்களுக்கான திட்டங்களை தீட்டவும், அத்திட்டங்களின் பயன் தகுதியான மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் பொருட்டு பழங்குடியினர் நல இயக்குநரகம் 2000–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தோற்றுவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில், பழங்குடியினர் அதிகமாக வசித்து வரும் சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை, தர்மபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் சென்னை ஆகிய 23 மாவட்டங்களில் வாழும் பழங்குடியின மக்களை கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றில் அனைத்து மக்களுக்கு இணையாக உயர்த்தும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களைச்

செயல்படுத்துவதன் மூலம் அவர்களை அனைத்து நிலைகளிலும் வளர்ச்சி அடையச் செய்திட அரசு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## 1 . கல்வி

பழங்குடியினரின் சமூக – பொருளாதார மேம்பாட்டில் கல்வி மிகவும் பயனுள்ள கருவியாக இருப்பதால், அவர்களது கல்வி நிலையை மேம்படுத்துவதற்கு அதிக முன்னுரிமை தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் பழங்குடியினரின் கல்வியறிவு விகிதம் 54.34 விழுக்காடு ஆகும். இது ஏனைய பொதுப் பிரிவினரின் கல்வியறிவு விகிதமான 80.09 விழுக்காடு உடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக உள்ளதை அறிந்துள்ள இத்துறை அவர்களது கல்வி மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், வனத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள், இதர தனியார் பள்ளிகள் மற்றும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளிகள் ஆகியவற்றில் மொத்தம்

1,80,696 பழங்குடியின மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர் (ஆதாரம் – ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை).

## 1 . 1 பள்ளிகள்

பழங்குடியின மக்களை சமூக நிலையில் மேம்பாடு அடையச் செய்வது அவர்களது கல்வியறிவினை உயர்த்துவதன் மூலமே இயலும் என்பதையும், பழங்குடியின மாணவர்கள் தொலை தூரம் சென்று கல்வி பயில்வதில் எழும் இடைநிற்றலின் அபாயத்தையும் உணர்ந்துள்ள இத்துறை அவர்களது குடியிருப்புகளுக்கு அருகில் விடுதியுடன் இணைந்த உண்டி உறைவிடப் பள்ளிகளை நடத்தி வருகிறது.

**அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம் (2021–2022)**

| விவரம் | பள்ளிகள் எண்ணிக்கை | மாணவர்கள் | மாணவிகள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 212 | 5,585 | 5,000 | 10,585 |
| நடுநிலைப் பள்ளிகள் | 49 | 2,171 | 2,051 | 4,222 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 31 | 2,134 | 1,743 | 3,877 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 28 | 5,043 | 4,536 | 9,579 |
| மொத்தம் | 320 | 14,933 | 13,330 | 28,263 |

**ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் (2021–2022)**

தமிழ்நாட்டில் பழங்குடியின மாணாக்கரின் கல்வி நலனுக்காக ஒன்றிய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன:–

| வ.எண் | மாவட்டம் | இடம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | வெள்ளிமலை | 480 | 0 | 480 |
| 2 | சேலம் | அபிநவம் | 0 | 480 | 480 |
| 3 | நீலகிரி | மு.பாலாடா | 179 | 149 | 328 |
| 4 | நாமக்கல் | செங்கரை | 330 | 117 | 447 |
| 5 | திருவண்ணா மலை | அத்திப்பட்டு | 238 | 176 | 414 |
| 6 | திருப்பத்தூர் | புதூர்நாடு | 218 | 143 | 361 |
| 7 | செங்கல்பட்டு | பட்டிப்புலம் | 117 | 82 | 199 |
| 8 | சேலம் | ஏற்காடு (நாகலூர்) | 120 | 61 | 181 |
| மொத்தம் | | | 1,682 | 1,208 | 2,890 |

## 1 . 2 விடுதிகள்

பழங்குடியின மக்களின் பொருளாதார நிலை மற்றும் மாணாக்கரின் இடைநிற்றல் ஆகிய காரணிகளை கருத்தில் கொண்டு, அனைத்து அடிப்படை வசதிகளுடன், படிக்கும் சூழ்நிலையை வழங்கும் விடுதிகளை இத்துறை நடத்தி வருகிறது.

**பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம். (2021–2022)**

| விடுதிகளின் வகைப்பாடு | விடுதிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பள்ளி விடுதிகள் | 40 | 910 | 647 | 1,557 |
| கல்லூரி விடுதிகள் | 2 | 0 | 76 | 76 |
| தொழிற் பயிற்சி நிலைய விடுதிகள் | 6 | 339 | 0 | 339 |
| **மொத்தம்** | **48** | **1,249** | **723** | **1,972** |

தற்போது நிலவி வரும் பொருளாதார சூழலைக் கருத்தில் கொண்டு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் / விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு உணவுக் கட்டணமாக பள்ளி மாணாக்கருக்கு ரூ.900/–இல் இருந்து ரூ.1,000/–ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு ரூ.1,000/–இல் இருந்து ரூ.1,100/–ஆகவும் ஜனவரி 2021 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், விழா நாட்களில் பள்ளி மாணாக்கருக்கு வழங்கப்படும் சிறப்பு உணவுக் கட்டணம் ரூ.20/–இல்

இருந்து ரூ.40/–ஆகவும் மற்றும் கல்லூரி மாணாக்கருக்கு ரூ.40/–இல் இருந்து ரூ.80/–ஆகவும் இருமடங்காக 2021–2022–ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேப்போன்று, விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணாக்கருக்கு சோப்பு, எண்ணெய், முடிவெட்டுதல் போன்ற ஏனைய சில்லரைச் செலவினங்களுக்கான தொகை ரூ.50/–இல் இருந்து ரூ.100/–ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு ரூ.75/–இல் இருந்து ரூ.150/–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும், பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு அவர்களது வாழ்விட சூழலைக் கருத்தில் கொண்டு இருள், குளிர் மற்றும் மழை ஆகிய இடர்பாடுகளை எதிர்கொள்ளும் வகையில் சூரிய ஒளி மின்விளக்கு (Solar Lamp), கம்பளி ஆடை (Sweater) மற்றும் மழை அங்கி (Rain coat) ஆகியவை கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றன.

## 1.2. (அ) தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

### (i) விடுதிகள்:

பழங்குடியின மாணாக்கருக்கு கல்வி வழங்கிடும் அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக சேலம் மாவட்டம் மாண்ட் போர்டு, கள்ளக்குறிச்சி மாவட்டம்–முருகு, திருவண்ணாமலை மாவட்டம் எஸ்.எப்.ஆர்.டி, கோயம்புத்தூர் மாவட்டம் வித்யாவனம் மற்றும் விருதுநகர் மாவட்டம் ராம்கோ & குரூப் ஆகிய ஐந்து தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் ஐந்து விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 1,244 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக் கட்டணம் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படும் சில்லரைச் செலவினம் மற்ற இதர செலவினம் இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கும் வழங்கப்படுகிறது.

### (ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் வசிக்கும் பழங்குடியின மாணாக்கரின் கல்வி வளர்ச்சிக்காக செயல்பட்டு வரும் Society For Rural Development எனும்

தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் மேல்நிலைப் பள்ளியில் 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை 1,876 மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி மற்றும் இப்பள்ளியுடன் இணைந்த விடுதியில் பணிபுரியும் 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் இத்துறையால் மானியமாக விடுவிக்கப்பட்டு வருகிறது. விடுதியில் தங்கிப் பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக்கட்டணம், சில்லரைச் செலவினம் மற்றும் இதரச் சலுகைகளும் 2005-ஆம் ஆண்டு முதல் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

2021-2022-ஆம் நிதியாண்டில் இப்பள்ளி மற்றும் விடுதிக்காக ரூ.3.18 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டு, 1,876 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022-23-ஆம் நிதியாண்டில் **ரூ.3.18 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1 . 2 (ஆ) பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகள் துவங்கிட முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் உள்ள தொலைதூர பழங்குடியின கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மாணாக்கர் எவரும் விடுபடாமல் தவறாது கல்வியறிவினைப் பெறும் வகையில் பள்ளிகள் நடத்த முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021–2022–ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டம், ஏற்காடு, கொம்புதூக்கி குறவன்காடு கிராமத்தில் இயங்கி வரும் மான்ட்ஃபோர்ட் பழங்குடியின சமுதாயப்பள்ளியில் பணியாற்றும் 50 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கான ஊதியம், உணவுக் கட்டணம் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.1.84 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 840 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.14.50 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1 .3 கல்வி உதவித்தொகை

### (i) ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

பழங்குடியின மாணாக்கர் தமது உயர்கல்வியினை தொடர்ந்திட பொருளாதார ரீதியாக உதவிடும் வகையில் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில், பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கல்விக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்புப் படி ஆகியவை உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித் தொகைக்கான செலவினம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட

வேண்டிய, அரசு / அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கல்விக் கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம், கல்வி நிறுவனங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் வரவு வைக்கப்படுகிறது. பராமரிப்புப்படி மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

சுயநிதிக் கல்லூரிகளிலுள்ள நிர்வாக ஒதுக்கீடு இடங்களுக்கு ஒன்றிய அரசு விதித்துள்ள கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நேர்வுகளில் கல்வி உதவித்தொகை கல்வி நிறுவனங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் வரவு வைக்கப்படுகிறது. பராமரிப்புப்படி மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது:–

(அ) உரிய அதிகாரம் பெற்ற அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட கட்டண நிர்ணய / கட்டணம் வரைமுறைப்படுத்தும் குழுவால் அத்தகைய பாடப்பிரிவுகளுக்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களை வரவேற்க விளம்பரம் செய்தல், வரப்பெற்ற விண்ணப்பங்களின் தரப்பட்டியல் வெளியிடுதல், தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்களை தேர்வு செய்தல் ஆகிய நடைமுறைகளை உள்ளடக்கியவாறு ஒளிவுமறைவற்ற முறையில் அத்தகைய இடங்களுக்கான சேர்க்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்

( ஆ) **பராமரிப்புப்படி**

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு கல்விக் கட்டணங்கள் வழங்கப்படுவதுடன், இதர கல்வி சார்ந்த செலவினங்களுக்காக பராமரிப்புப்படியும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்பு வாரியான பராமரிப்புப்படித் தொகை விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | பொறியியல், மருத்துவம், சட்டம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த தொழில் படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர் (CA/CWA/CS/CFA etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (M.Phil, Ph.D., & Post Doctoral programmes) | 1,200/- | 550/- |

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| II | 12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற்படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் (B.Sc.,(Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T etc., ) | 820/– | 530/– |
| III | தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப் படிப்புகள் (B.A./ B.Sc./ B.Com./ M.A.,/ M.Sc./ M.Com., etc.,) | 570/– | 300/– |
| IV | 10–ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில் நுட்பப் பட்டயப்படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (XI, XII, ITI, தொழிற் பயிற்சிக் கல்வி etc.,) | 380/– | 230/– |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.31.66 கோடி மதிப்பிலான கல்வி உதவித் தொகை 23,324 மாணாக்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் ரூ.46.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகுதி:–

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

### (ii) ஒன்றிய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது ஒன்றிய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின மாணாக்கரின் கல்விக்கான செலவினத்தில் ஒரு பகுதியை ஏற்றிடும் வகையில், ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் பின்வருமாறு வரவு வைக்கப்படுகிறது:–

| | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
|---|---|---|
| | (ரூபாயில்) | |
| பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு) | 525 | 225 |
| தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு) | 1000 | 750 |

2021–2022–ஆம் நிதியாண்டில் ரூ.4.10 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு 14,011 மாணக்கர் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினை செயல்படுத்த ஏற்படும் செலவினத் தொகை 75:25 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.4.10 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகுதி:**

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

## (iii) மாநில அரசு கல்வி உதவித் திட்டங்கள்

பழங்குடியின மாணாக்கர் தமது கல்வியை முழுமையாக எவ்வித தடையுமின்றி முடிக்க உதவிடும் வகையில், ஆதிதிராவிட மாணாக்கருக்கு வழங்கப்படுவது போன்று, பழங்குடியின மாணாக்கருக்கும் கீழ் குறிப்பிட்டுள்ள மாநில அரசின் கல்வி உதவித் தொகை மற்றும் கல்விக்கட்டணச் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

- உயர் கல்விச் சிறப்பு படிப்புதவித் தொகை.
- கற்பிப்புக் கட்டணச் சலுகை
- இளங்கலை மாணாக்கருக்கான கல்விக் கட்டணச் சலுகை.
- முதுகலை மாணவியருக்கான கல்விக் கட்டணச் சலுகை.
- பள்ளி மாணாக்கருக்கான சிறப்புக் கட்டணச் சலுகை.
- இதர கட்டணச் சலுகைகள்
- பெண் கல்வி ஊக்கத்தொகை. (3 முதல் 8–ஆம் வகுப்பு வரை)

## 2. ஒன்றிய அரசின் நலத் திட்டங்கள்

### 2. (அ) பிரதம மந்திரியின் பழங்குடியினர் கிராம முன்மாதிரித் திட்டம் (Pradhan Mantri Aadi Adarsh Gram Yojana)

பழங்குடியின மக்களை கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக நிலைகளில் உயர்வடையச் செய்வதற்காக மாநில அரசால் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்திடும் பொருட்டு ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வந்த சிறப்பு ஒன்றிய உதவி பழங்குடியினர் துணைத் திட்டம், (Specail Central Assistance to Tribal Sub Scheme) 2022–2023–ஆம் ஆண்டு முதல் பிரதான் மந்திரி ஆதி ஆதர்ஷ் கிராம் யோஜனா (Pradhan Mantri Aadi Adarsh Gram Yojana) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, ஒரு கிராமத்தின் மொத்த மக்கள்தொகையில் 50 விழுக்காட்டிற்கு மேல் அல்லது 500–க்கும் அதிகமான பழங்குடியின மக்கள் வசிக்கும் 167 கிராமங்கள் ஒன்றிய அரசால் கண்டறியப்பட்டுள்ளன. 2021–2022 முதல் 2025–2026 வரையிலான ஐந்து ஆண்டுகளில் ஒரு கிராமத்திற்கு ரூ.20.38 இலட்சம் வீதம்,

அக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு நிதி வழங்கப்பட உள்ளது.

2021–2022–ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் முதற்கட்டமாக 28 கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ரூ.2.85 கோடி நிதி ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2022–2023–ஆம் நிதி ஆண்டில் ரூ.6.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2 . (ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு 275(1)–இல் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு, பழங்குடியின மக்களின் மனிதவள மற்றும் வாழ்க்கைத் தர மேம்பாடு, வறுமை ஒழிப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு ஆகிய அம்சங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு 100 விழுக்காடு நிதியுதவியினை வழங்கி வருகிறது.

அவ்வகையில், இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதி ஏழு மாவட்டங்களில் இயங்கி வரும் பழங்குடியினர் திட்ட

அலுவலகங்களின் தொடர் செலவினத்திற்கு செலவிடப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதி ஆண்டில் **ரூ.17.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. (இ) அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.**

இந்தியாவில் உள்ள பழங்குடியின இனங்களுள், மக்கள்தொகை தொடர்ந்து அதிகரிக்காமலோ அல்லது குறைந்து கொண்டோ வரும் நிலையில் உள்ள சில இனங்கள் "அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர்" என ஒன்றிய அரசால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள 36 வகையான பழங்குடியினரில், 6 வகை பழங்குடியினர், அதாவது, தோடா, கோட்டா, குரும்பர், இருளர், பனியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இம்மக்களின் வாழ்க்கை நிலை குறித்த தளநிலை கணக்கெடுப்பு (PVTGs Baseline Survey) மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில், வீட்டு வசதி, கல்வி மேம்பாடு, சுகாதாரக்

கட்டமைப்பு, நில மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, சூரிய ஒளி மின்விளக்குகள், பாசன வசதி, திறன் மேம்பாடு மற்றும் அவர்களின் கலாச்சாரத்தைப் பாதுகாத்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒன்றிய அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2021–2022–ஆம் நிதியாண்டில், ரூ.19.67 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, அதில் ரூ.13.54 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாழ்ந்து வரும் இருளர் பழங்குடியின மக்களுக்கு 443 வீடுகள் கட்டுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2022–23–ஆம் நிதியாண்டில் **ரூ.40.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. (ஈ) சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்**

வனங்களில் குடியிருக்கும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் பொதுவாக அவ்வனங்களில் கிடைக்கும் தேன், சிறுதானியங்கள், புளி மற்றும் இதர சிறுவனப் பொருட்களைச் சார்ந்தே உள்ளது. அவை அவர்களின்

உணவு, உறைவிடம், மருத்துவத் தேவைகளின் அடிப்படையாக அமைந்துள்ளன.

இப்பொருட்களின் விலை தேவையின் அடிப்படையில் அமையாமல் கொள்முதல் செய்யும் வியாபாரிகளாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, சிறு வன விளைபொருட்களை சேகரிப்போருக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு "சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்" என்ற திட்டம் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கூட்டமைப்பு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறு வனப் பொருட்களை மதிப்புக் கூட்டுதல் மூலம் பழங்குடியினருக்கு கூடுதல் வருவாய் கிடைக்க ஏதுவாக, இத்திட்டத்தின் கீழ் வனவள மையம் (Van Dhan Vikas Kendras) ஒன்றிய அரசின் நிதியின் கீழ் உருவாக்கப்படுகிறது.

தலா 10 உறுப்பினர்களைக் கொண்ட, 30 சுய உதவிக்குழுக்களைக் கொண்டு வனவள மையம்

உருவாக்கப்பட்டு பழங்குடியினரிடமிருந்து சிறு வனப் பொருட்களை சேகரித்தல், மதிப்புக்கூட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சிறு வன பொருட்கள் மெருகூட்டப்படுகின்றன.

வனவள மையம் உருவாக்குவதற்குத் தேவையான உபகரணங்கள், பயிற்சிகள் ஏனைய செயல்பாடுகளுக்காக ஒன்றிய அரசால் ரூ.15.00 இலட்சம் மாவட்ட ஆட்சியரின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள ஜவ்வாதுமலை மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலையில் ஏழு வன வள மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் நலத்துறை இத்திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும் (State Nodal Agency), தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் 22 பெரும் பன்னோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS) இத்திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனமாகவும் நியமிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினரிடமிருந்து சிறு வனப் பொருட்களை கொள்முதல் செய்யும் பொருட்டு

ஒன்றிய அரசின் 75 விழுக்காடு பங்களிப்பு மற்றும் மாநில அரசின் 25 விழுக்காடு பங்களிப்புடன் ரூ.305.30 இலட்சம் சுழல் நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

**2. (உ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006–ஐ செயல்படுத்துதல்**

வனங்களில் வசிக்கும் பழங்குடியின சமூகங்கள் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரின் உரிமைகளை அங்கீகரிக்கும் பொருட்டு "பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006", ஒன்றிய அரசால் இயற்றப்பட்டு, 29.12.2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி 13.12.2005–ஆம் நாளுக்கு முன்பிருந்து வனங்களில் வசித்து வரும் பழங்குடியினரும், இத்தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக (அதாவது 75 ஆண்டுகளாக) பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரும், வன உரிமைகள் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இச்சட்டம் 18 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**இச்சட்டத்தின் குறிக்கோள்கள்**

1. பழங்குடியினர் மற்றும் பிற மரபுவழியாக குடியிருப்போரின் பூர்வீக நிலத்திற்கான உரிமைகளை வழங்குதல்
2. பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக குடியிருப்போருக்கு வனங்களில் காணப்படும் சிறு வனப் பொருட்களை சேகரித்தல், பயன்படுத்துதல் மற்றும் விற்பனைக்காக வெளியே எடுத்துச் செல்லும் உரிமைகளை வழங்குதல்
3. பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக குடியிருப்போர் சமுதாய பயன்பாட்டிற்கு வன நிலங்களை பயன்படுத்துவதற்கான உரிமைகளை வழங்குதல்

இச்சட்டத்தின்படி, பழங்குடியினர் குடியிருக்கும் வன நிலங்களுக்கு புவியியல் தரவுகளின் அடிப்படையில் தனி நபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுதாரர்களின் கோரிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்ய மூன்று நிலையிலான குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

1. கிராம சபா
2. வருவாய் கோட்ட அலுவலர் தலைமையிலான உட்கோட்ட அளவிலான குழு
3. மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான மாவட்ட அளவிலான குழு

இச்சட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும், வன உரிமைகள் முறையாக வழங்குவதை உறுதி செய்து கண்காணிக்கவும் தலைமைச் செயலர் தலைமையில் மாநில அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, செயல்பாடுகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

இச்சட்டத்தின் கீழ் இதுவரை 9,838 தனிநபர் உரிமைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களில், 9,267 உரிமைகளும், 545 சமூக உரிமைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களில், 472 உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

2 . (ஊ) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்

தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினரின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கீழ் 1984–85–ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில், மு.பாலாடா என்ற இடத்தில் தொடங்கப்பட்டது. 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட இம்மையம் பழங்குடியினர் தொடர்பான ஆராய்ச்சிகளை செய்து வருகிறது.

இம்மைய வளாகத்தில் அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியின மகளிரைக் கொண்டு நடத்தப்படும் சில்லரை எரிபொருள் விற்பனை நிலையம் அமைந்துள்ளது. இவ்விற்பனை நிலையத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 2000 லிட்டர் டீசல் மற்றும் 4000 லிட்டர் பெட்ரோல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இம்மையத்தில், 1996–ஆம் ஆண்டு சூரியஒளி மின்சார வசதியுடன் கூடிய ஒரு திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு பழங்குடியினர் குறித்த

கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் அக்ரிலிக் உறையில் பாதுகாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 2021–2022–ஆம் ஆண்டில் இவ்வருங்காட்சியகம் மற்றும் விற்பனை நிலையம் ஆகியவை ரூ.45.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

**பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தால் நடத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளின் விவரம்.**

2021–2022–ஆம் ஆண்டில் பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தால் பின்வரும் ஆய்வுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன:

- வால்பாறையில் வசிக்கும் முதுவன் இனத்தவரின் தங்குமிடம், பழங்குடியினரின் தொழில் முனைவு, வளர்ச்சி, சாத்தியக் கூறுகள், பழங்குடியின மக்களின் இடப்பெயர்வு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ஓவியக் கலையில் சிறந்து விளங்கும் குரும்பர் இன மக்களின் ஓவியக் கலையை புதுப்பிக்கும் வண்ணம், இவ்வின இளைஞர்களுக்கு பாரம்பரிய மற்றும் புதிய ஓவியக் கலைநுட்பங்கள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

- நீலகிரி மாவட்டத்திலுள்ள தோடர் பழங்குடியின இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கு அவர்களது பாரம்பரிய பூ தையல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- நீலகிரி மாவட்டத்திலுள்ள கோத்தர் பழங்குடியின இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கு பாரம்பரிய மண்பானை செய்யும் பயிற்சி வழங்கப்பட்டது.

இம்மையத்தின் நிருவாகச் செலவினங்கள் மாநில அரசாலும், திட்ட நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் ஒன்றிய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தாலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

2022–2023–ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிருவாகச் செலவுகளுக்காக **ரூ.64.37 இலட்சம்** அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. மாநில அரசின் திட்டங்கள்

### 3. (அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் [Comprehensive Tribal Development Programme (CTDP)]

பழங்குடியினரின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காக அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை

வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் வகையில் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் 2012–13–ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் நிதியின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து நில மேம்பாட்டுப் பணிகள், கூரை வீடுகளைச் சீரமைத்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் ஆகியவை தாட்கோ மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

பழங்குடியினரின் பாரம்பரியத் திறனை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடும் பொருட்டும், அவர்கள் சுயதொழில் துவங்க தலா ரூ.50,000/– வீதம்,

100 பயனாளிகளுக்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2021–2022–ஆம் நிதியாண்டில் ரூ.22.29 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022–2023–ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக **ரூ.95.00 கோடி** அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3. (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (Integrated Tribal Development Programme (ITDP)

தமிழ்நாட்டில் உள்ள சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஏழு மாவட்டங்களில், மொத்த மக்கள் தொகையில் பழங்குடியின மக்கள் 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் அதிகம் வசிக்கும் 10 பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில், பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டப்

பணிகள் மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இயங்கி வரும் ஏழு பழங்குடியினர் திட்ட அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகள்

| வ. எண் | மாவட்டம் | திட்டப்பகுதிகள் |
|---|---|---|
| 1. | சேலம் | ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்ராயன்மலை |
| 2. | நாமக்கல் | கொல்லிமலை |
| 3. | கள்ளக்குறிச்சி | கல்ராயன்மலை |
| 4. | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை |
| 5. | திருச்சிராப்பள்ளி | பச்சமலை |
| 6. | தருமபுரி | சித்தேரி மலை |
| 7. | திருப்பத்தூர் | ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை |

இத்திட்டத்திற்கென, 2022–2023–ஆம் நிதியாண்டில் **ரூ.2.96 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3 . (இ) சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் (Special Vocational Guidance Centre)

பழங்குடியின இளைஞர்கள் தமது வேலையினைத் தேர்ந்தெடுக்கவும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை வழங்கிடும் பொருட்டும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம் நீலகிரி மாவட்டம், உதக மண்டலத்தில் 06.03.1980 முதல் இயங்கி வருகிறது.

இம்மையத்தின் செயல்பாட்டிற்காக 2021–2022–ஆம் நிதியாண்டில் ரூ.25.52 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022–2023–ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டிற்காக **ரூ.32.65 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3 . (ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs)

பழங்குடியின இளைஞர்களை பல்வேறு தொழிற் பிரிவுகளில் திறன் பெறச் செய்து, அவர்கள் உற்பத்தித் துறைகளில் வேலைவாய்ப்பை பெறுவதற்கு உதவிடும் பொருட்டு பழங்குடியினருக்கென தனியாக ஆறு

தொழிற்பயிற்சி நிலையங்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. 2021–2022–ஆம் கல்வியாண்டில் 1260 மாணாக்கர் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

| வ. எண். | மாவட்டம் | தொழிற் பயிற்சி நிலையத்தின் பெயர் | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | 252 |
| 2. | கோயம்புத்தூர் | ஆனைகட்டி | 198 |
| 3. | சேலம் | கருமந்துறை | 192 |
| 4. | திருவண்ணாமலை | ஜமுனாமரத்தூர் | 196 |
| 5. | நாமக்கல் | கொல்லிமலை | 208 |
| 6. | நீலகிரி | கூடலூர் | 212 |
| **மொத்தம்** | | | **1,258** |

மேற்காணும் ஆறு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான விடுதிகள் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன.

2022–2023–ஆம் நிதியாண்டில் இந்த ஆறு தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டுக்கென **ரூ. 9.04 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3. (உ) பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம்.

பெரும்பாலான பழங்குடியின குடியிருப்புகள் மலை மற்றும் மலைப்பாங்கான இடங்களில் இருப்பதால் அக்குடியிருப்புகளில் அனைத்து அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதி செய்திடும் வகையில் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2021–2022–ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(i) ரூ.123.86 கோடி மதிப்பீட்டில் 830 தெரு விளக்குகள், 3,235 சூரிய ஒளி விளக்குகள் மற்றும் 1,196 பாதுகாப்பான குடிநீர் வசதிகள் போன்ற பணிகளை ஊரக வளர்ச்சி முகமை மற்றும் வனத்துறையின் மூலம் மேற்கொள்ளுதல்.

(ii) ரூ.5.11 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம் ஒடுக்கத்தூர் பகுதியில் முத்துக்குமரன் மலை முதல் பீஞ்சமந்தை வரை இணைப்புச் சாலை வனத்துறையின் மூலம் ஏற்படுத்துதல்.

(iii) ரூ.4.86 கோடி மதிப்பீட்டில் 31 அரசு உண்டி உறைவிடப்பள்ளிகளில் 65 கழிவறைக்கூடம் கட்டுதல்.

(iv) ரூ.21.09 கோடி மதிப்பீட்டில் 39 அரசு உண்டி உறைவிடப்பள்ளிகளில் 65 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் 34 அரசு உண்டி உறைவிடப்பள்ளிகளில் சுற்றுச் சுவர் கட்டுதல்.

இத்திட்டத்திற்கென 2022–2023–ஆம் நிதியாண்டில் **ரூ.175.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் உரிமையியல் மேல்முறையீட்டு எண்.5854/94 நாள் 02.09.1994–இல் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, பழங்குடியினருக்கு வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியரால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய, மாநில அளவில் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் அமைப்பு விவரம் பின்வருமாறு:

## மாநில அளவிலான கூர்நோக்குக் குழுக்கள்

| | | |
|---|---|---|
| அரசு முதன்மைச் செயலாளர் / அரசு கூடுதல் செயலாளர்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | தலைவர் | பழங்குடியினர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டக் கூறு 226–இன்படி சென்னை உயர் நீதி மன்றத்திலும், சட்டக் கூறு 136–இன்படி உச்சநீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |
| இயக்குநர், பழங்குடியினர் நலம் / துணை வனப் பாதுகாவலர்கள் | உறுப்பினர் செயலர் | |
| இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்/ மானுடவியல் வல்லுநர்கள் | உறுப்பினர் | |

**கண்காணிப்புப் பிரிவுகள்**

பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிந்திட, கள ஆய்வு செய்து, சரிபார்த்து, மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு அறிக்கை

அளிக்க ஏதுவாக சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் கண்காணிப்புப் பிரிவுகள் கீழ்க்கண்ட காவல்துறை அலுவலர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

| பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|
| துணை காவல் கண்காணிப்பாளர் | 1 |
| காவல் ஆய்வாளர் அல்லது உதவி காவல் ஆய்வாளர் | 1 |
| தலைமைக் காவலர் | 1 |

மேற்கண்ட நான்கு மண்டல கண்காணிப்புப் பிரிவுகளுடன், கூடுதல் காவல்துறைத் தலைவர் (சமூகநீதி மற்றும் மனித உரிமைகள்) அவர்களின் தலைமையின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கிவரும் 38 சமூக நீதி மற்றும் மனித உரிமைப்பிரிவுகளும் (மாவட்டங்களில் 31 பிரிவுகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 7 பிரிவுகள்) அவர்களின் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, களஆய்வு மேற்கொண்டு மாநில கூர்நோக்குக் குழுக்களுக்கு பரிந்துரை செய்கின்றன.

மேலும், மாவட்ட அளவில் நடைபெறும் கண்காணிப்புப் பணிக்கு உதவி புரியும் வகையில் 14 மானுடவியல் வல்லுநர்களும் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

## 5. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியின மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் நிலவி வரும் பின்னடைவினை நீக்கி அவர்களை சமூக நீரோட்டத்தில் இணையச் செய்திட மாநில அரசின் உதவிகள் வழங்கப்படுவதன் அவசியத்தை உணர்ந்து பழங்குடியினர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1976–77–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கென மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்கள் தொகை விகிதத்திற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2022–2023–ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத்திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம் – Welfare Expenditure of State) ரூ.74,892.56 கோடியில்,

பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் (பழங்குடியினர் நலத்திட்ட செலவினம் – Expenditure on Scheduled Tribes Welfare) ரூ.1589.27 கோடி (2.12 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ் நாட்டிலிருக்கும் பழங்குடியின மக்கள் தொகை விழுக்காட்டை (1.10%) காட்டிலும் அதிகமாகும்.

செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் பழங்குடியினருக்கான திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதற்காக பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

பழங்குடியினர் துணைத்திட்டம், கீழ்க்கண்ட 48 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 20 செயலாக்கத் துறைகள் மூலம் பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது:–

| 2022–23 ஆம் ஆண்டில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பிரிவு ( SECTORAL ) வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் (ரூ.கோடியில்) | | |
|---|---|---|
| வ.எண் | பிரிவு | நிதி ஒதுக்கீடு |
| 1 | ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 621.35 |
| 2 | ஊரக வளர்ச்சி | 273.29 |
| 3 | குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு | 260.60 |
| 4 | கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாடு | 113.83 |
| 5 | சமூகநலன் மற்றும் சத்துணவு | 109.34 |
| 6 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி | 105.31 |
| 7 | மக்கள் நல்வாழ்வு – குடும்பநலன் | 43.60 |
| 8 | வேளாண்மையும் தொடர்பான நடவடிக்கைகளும் | 32.35 |
| 9 | தொழிலாளரும் தொழிலாளர் நலனும் | 11.60 |
| 10 | பொதுவான பொருளாதாரப்பணிகள் | 9.46 |
| 11 | சிறப்பு பகுதித் திட்டங்கள் | 7.50 |
| 12 | தொழிலும் கனிமங்களும் | 0.84 |
| 13 | ஏனைய சமூகப் பணிகள் | 0.21 |
| | மொத்தம் | 1589.27 |

இத்திட்டத்தின் கீழ் மாநில அளவில் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் அரசு முதன்மைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராகவும், இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும், மாவட்ட அளவில் இத்திட்டத்தின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர், கண்காணிப்பு அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து துறைத்தலைமை அலுவலர்களுடன் இணைந்து கண்காணிக்கப்படுகிறது.

## III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) 15.02.1974 அன்று தொடங்கப்பட்டது. துவக்கத்தில், வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு இலவச தீப்பிடிக்காத வீடுகளை இக்கழகத்தின் கட்டுமானப்பிரிவு கட்டிக் கொடுத்தது. பின்னர், தொழில் முனைவு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களுக்கான நிதியுதவியை மேம்படுத்துவதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார வளத்தினை மேம்படுத்துவதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் இக்கழகத்தின் செயல்பாடுகள் விரிவடைந்துள்ளன.

## 1. பங்கு மூலதனம்

இக்கழகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே **ரூ.200 கோடி** மற்றும் **ரூ.147.11 கோடி** ஆக உள்ளது. 1980–ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தை மாநில அரசும், ஒன்றிய அரசும் 51:49 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

## 2. தாட்கோவின் நடவடிக்கைகள்

1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்.
3. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

## 2.1 பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வறுமையை குறைப்பதில் தாட்கோ ஒரு உந்து சக்தியாக செயல்படுகிறது. அரசு மானியம் மற்றும் வங்கிகள், தேசிய ஆதி திராவிடர் பொருளாதார

மேம்பாட்டுக் கழகம் (NSCFDC) மற்றும் தேசிய பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (NSTFDC) ஆகிய நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடனுதவியுடன் பல்வேறு தேவை அடிப்படையிலான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் இக்கழகத்தால் வகுக்கப்பட்டு மாவட்ட மேலாளர்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள், சிறு தொழில், போக்குவரத்து, வர்த்தகம் மற்றும் சேவைத் துறை ஆகிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு மூலதனச் சொத்துக்களை உருவாக்க ஆதி திராவிடர்களுக்கு திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் இவற்றுள் குறைவான தொகையும், அவர்கள் இலகு ரக வாகனம் வாங்கிட ரூ.4.00 இலட்சம் வரையிலும், கனரக

வாகனம் வாங்கிட ரூ.5.50 இலட்சம் வரையிலும் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களின் கீழ் உதவி பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ஆதிதிராவிடருக்கு ரூ.2.00 இலட்சம் ஆகவும், பழங்குடியினருக்கு ரூ.3.00 இலட்சம் ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2021–2022–ஆம் நிதியாண்டில், பல்வேறு திட்டங்களின் கீழ் 32,369 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு, ரூ.185.57 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2.1 அ. மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள்

### i) நிலம் வாங்கும் திட்டம் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டம்

நிலமற்ற ஆதி திராவிட மகளிரை நில உடமையாளர்களாக்கி அவர்களது சமூக நிலையினை உயர்த்திட வழிவகுக்கும் இச்சிறப்புத் திட்டம் 2004–05 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. மகளிர் இல்லாத குடும்பங்களில் ஆண்களுக்கு நிதியுதவி வழங்கப்படும் .

**இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- நிலம் ஆதிதிராவிட பயனாளி பெயரில் பதிவு செய்யப்படுகிறது.
- இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவு கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது..
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற இனத்தவரிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும்.

ஆதி திராவிட இனத்தவரின் நில உடமையை அதிகரிப்பதுடன், அந்நிலத்தின் பயன்பாட்டை உயர்த்தி ஆழ்துளைக் கிணறு / திறந்தவெளிக் கிணறுகள் அமைத்தல், பவர் டில்லர் வாங்குதல் போன்ற விவசாய நிலமேம்பாடு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிகள் மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்குவதன் மூலம் வருவாய் ஈட்ட வழி செய்யும் நில மேம்பாட்டுத் திட்டம் 2013–2014–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டு 175 பயனாளிகளுக்கு ரூ.2.28 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### (ii) ஆதி திராவிடர்களுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆதி திராவிட இனத்தை சார்ந்த தனிநபர் மற்றும் குழுக்கள் வருவாய் ஈட்டும் தொழில் புரிந்து தமது பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு, கல்வித் தகுதி ஏதுமின்றி இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் திட்டத்தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது

இத்திட்டத்தின் கீழ், 2021–2022–ஆம் ஆண்டு 4362 பயனாளிகளுக்கு ரூ.64.63 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### (iii) பழங்குடியினருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியின மக்கள் தொடர் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிவதன் மூலம் தங்களது

பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது.

திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.3.75 இலட்சம் இவற்றுள் எது குறைவான தொகையோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2021–2022 ஆம் ஆண்டு 410 பயனாளிகளுக்கு ரூ.9.50 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### (iv) ஆதி திராவிடர் இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட படித்த ஆதிதிராவிட இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த / விருப்பமான சுய தொழில் துவங்க இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2021–2022–ஆம் ஆண்டு 1,259 பயனாளிகளுக்கு ரூ.19.47 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## (v) பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

பழங்குடியின இளைஞர்கள் வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிந்து தங்களது பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.3.75 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் வைத்துள்ள பழங்குடியின இளைஞர்களுக்கு பயணியர் வாகனம் / ஈப்பு வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்ச மான்யம் ரூ.4.00 இலட்சம் வரையிலும் கனரக வாகனம் வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.5.50 இலட்சம் வரையும், இதர தொழில்களுக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிக பட்சம் ரூ.3.75 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2021–2022 ஆம் ஆண்டு ரூ.23.75 இலட்சம் நிதியுதவி மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

## (vi) இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலை வாய்ப்புத் திட்டம்

மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS) இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ சிகிச்சை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013–14ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் முடநீக்கு வல்லுநர், மருந்தாளுநர், கண்ணாடி வினைஞர் (optician) மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் முதலிய மருத்துவம் சார்ந்த படிப்புகளில் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம் / கண் கண்ணாடி கடை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கும், விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் உரிய மன்றத்தில் பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், 2021–2022–ஆம் ஆண்டு 8 பயனாளிகளுக்கு ரூ.15.58 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### (vii) ஆதிதிராவிட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்.

ஆதிதிராவிட மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக அவர்கள் வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்வதற்காக குறைந்த வட்டியுடன் கூடிய நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்கள் தங்களது வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக கடன் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினை துவங்குவதற்காக ஒவ்வொரு குழுவிற்கும் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2021–2022 –ஆம் ஆண்டு 4,730 உறுப்பினர்களைக்கொண்ட 389 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.9.69 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## (viii) பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், பழங்குடியின மகளிரை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டு இயங்கும், இரு முறை தர நிர்ணயம் செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்கள், வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள், தோட்டக்கலை, மலரியல், சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டி கடைகள் அமைத்தல், சுற்றுலா சார்ந்த தொழில்கள் செய்ய திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியம் விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2021–22 ஆம் ஆண்டு 72 உறுப்பினர்கள் கொண்ட 6 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.22.35 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2 . 1 . ஆ. மானிய உதவித் திட்டங்கள்

### (i) விவசாயிகளுக்கான துரித மின் இணைப்பு மானிய உதவித் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற்றிட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்புத் தொகை செலுத்தும் இத்திட்டம் 2008–2009–ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.75,000/–லிருந்து 2021–2022–ஆம் நிதியாண்டு முதல் பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது:–

| குதிரைசக்தித் திறன் | வைப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 90 சதவீத நிதியுதவி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 5 HP | 2.50 | 2.25 |
| 7.5 HP | 2.75 | 2.47 |
| 10 HP | 3.00 | 2.70 |
| 15 HP | 4.00 | 3.60 |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் ஆண்டு 827 நபர்களுக்கு நிலுவையில் இருந்த பகுதி வைப்புத் தொகை

ரூ.5.35 கோடி தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட்டு விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் சார்பாக 90 விழுக்காடு வைப்புத் தொகை செலுத்தி இலவச மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆக மொத்தம் இத்திட்டத்தில் 1,827 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.28.65 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### (ii) விவசாயிகளுக்கு மின் மோட்டார் வாங்க மானியம் வழங்கும் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் ஆழ்துளை மற்றும் திறந்தவெளிக் கிணறுகள் மூலம் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்படும் புதிய மின் மோட்டார் வாங்குவதற்கு 1,800 ஆதிதிராவிட விவசாயிகள் மற்றும் 200 பழங்குடியின விவசாயிகள் என மொத்தம் 2,000 விவசாயிகளுக்கு, ஒரு விவசாயிக்கு தலா ரூ.10,000/- வீதம் மொத்தம் ரூ.2.00 கோடி செலவினத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்திட

2021–22–ஆம் நிதியாண்டில் அரசாணை வெளியிடப்பட்டு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

### (iii) விவசாயிகளுக்கு நீரேற்றக் குழாய்கள் வாங்க மானியம் வழங்கும் திட்டம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் தங்கள் நில மேம்பாட்டிற்காக ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளிக் கிணறுகள் மூலம் நீர்ப் பாசனத்திற்கு தேவைப்படும் நீரேற்றக் குழாய்களை (பிவிசி குழாய்) வாங்குவதற்கு ஒரு விவசாயிக்கு ரூ.15,000/– வீதம் 1,300 ஆதிதிராவிட விவசாயிகள் மற்றும் 700 பழங்குடியின விவசாயிகள் என மொத்தம் 2,000 விவசாயிகளுக்கு ரூ.3.00 கோடி செலவினத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்திட 2021–22–ஆம் நிதியாண்டில் அரசாணை வெளியிடப்பட்டு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

## 2. 2 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

சமூகத்தின் விளிம்பு நிலைப் பிரிவுகளான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார வலுவூட்டலுக்கு தாட்கோ உதவுகிறது. இவ்வின மக்களில் பெரும்பாலானோர் குறைந்தபட்ச பொருளாதார

சொத்துக்களையே கொண்டுள்ளனர். அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு அவர்களின் திறனை மேம்படுத்துவதும் மற்றும் பயிற்சி அளிப்பதும் அவசியம் ஆகும். எனவே, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் / தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**தாட்கோ மூலம் நடத்தப்படும் முக்கியமான பயிற்சிகள்**

- ஆயத்த ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்கார பொருட்கள் வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிகள்
- தானியங்கி மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்
- வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத்துறை தொடர்பான பயிற்சிகள்
- அழகு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான பயிற்சிகள்
- மின்னணு மற்றும் வன்பொருள் தொடர்பான பயிற்சிகள்
- மருத்துவச் சேவைகள் தொடர்பான பயிற்சிகள்
- தோல் தொழில் நுட்பம் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- சரக்கு வாகன போக்குவரத்து தொடர்பான பயிற்சிகள்
- ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான பயிற்சிகள்

- குழாய் செப்பனிடுதல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகள்
- மின்சாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- சில்லரை வணிகம் மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்

2021–2022 ஆம் நிதியாண்டில் 7,666 ஆதிதிராவிடர் மற்றும் 360 பழங்குடியினருக்கு 106 பயிற்சி நிறுவனங்கள் மூலம் ரூ.5.32 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன.

## (i) விவசாயிகளுக்கு தோட்டக்கலை, வேளாண் தொழில்நுட்ப பயிற்சி

2021–2022–ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்த விவசாயிகளுக்கு தோட்டக்கலை மற்றும் வேளாண் தொழில்நுட்பப் பயிற்சிகளை ரூ. 1.70 கோடி செலவில் பின்வருமாறு வழங்கிட அரசாணைகள் வெளியிடப்பட்டு மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

| பயிற்சி | விவசாயிகளின் எண்ணிக்கை | செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| தோட்டக்கலை | 3000 | 60.00 |
| வேளாண் காடுகள், நர்சரி செடிகள் உருவாக்கி விற்பனை செய்தல், மண்புழு உரம் தயாரித்தல், விவசாய மேலாண்மை | 1000 | 40.00 |
| அறுவடை தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் இயந்திரங்கள் ஆகிய இயந்திரங்கள் தொடர்பான பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்தல் | 3500 | 70.00 |

## (ii) தொழில் முனைவோருக்கு தொழில் மேலாண்மை பயிற்சி வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத்

திட்டத்தின் கீழ், 4,500 ஆதி திராவிடர் மற்றும் 500 பழங்குடியினர் என கடன் ஒப்புதல் ஆணை வழங்கப்பட்ட 5,000 தொழில் முனைவோருக்கு, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (Entrepreneurship Development Institute of India (EDII) மூலம் மாவட்ட அளவில் 7 நாட்கள் தொழில் மேலாண்மை பயிற்சிகள் வழங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டு 2021–2022–ஆம் நிதியாண்டில் ரூ.1.08 கோடி செலவில் 2,520 தொழில் முனைவோருக்கு மாவட்ட அளவில் தொழில் மேலாண்மைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 2.3. கட்டுமானப் பணிகள்

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளின் கட்டுமானப் பணிகளையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக சமுதாயக் கூடங்கள் கட்டும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது. ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல் முதலிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தாட்கோ கட்டுமானப் பிரிவு மூலம் தற்போது பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.337.91 கோடி மதிப்பிலான 357 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (i) ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதி திராவிடர் மாணாக்கருக்கான விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டத்தில் 13 மாணவ, மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் ரூ.21.80 கோடி மதிப்பீட்டில் 11 மாவட்டங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுக் கூறு 275(1)–இன் கீழ் செங்கல்பட்டு மாவட்டம் – குமிழி, திருப்பத்தூர் மாவட்டம் – கீழூர், திருவண்ணாமலை மாவட்டம் – புளியம்பட்டி, நாமக்கல் மாவட்டம் –செங்கரை மற்றும் நீலகிரி மாவட்டம் – மு.பாலாடா ஆகிய 5 இடங்களில் இயங்கி வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கான பள்ளி வகுப்பறை மற்றும் ஆய்வுக் கூடங்கள் மற்றும் இருபாலருக்கான விடுதிக் கட்டடங்கள் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

**(ii) மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்.**

நிலை உயர்த்தப்பட்ட ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், சுற்றுச் சுவர் மற்றும் சமுதாயக் கூடங்கள் கட்டுதல், சிறப்பு பழுது பார்க்கும் பணி மற்றும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் கல்வராயன் மலையில் உள்ள அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

போன்ற பணிகள் மாநில அரசின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2021–2022–ஆம் ஆண்டில் மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.186.85 கோடி மதிப்பீட்டிலான 238 பணிகள் கையாளப்பட்டு வருகின்றன.

### (iii) நபார்டு திட்டப் பணிகள்: (ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் நலனுக்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்களுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வு கூடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகளான சுற்றுச்சுவர், குடிநீர் வசதி, கழிவறைக் கூடம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் ரூ.69.26 கோடி மதிப்பீட்டிலான 101 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 2021–2022–ஆம் ஆண்டில் 150 பள்ளிகளில் 480 வகுப்பறைகள் மற்றும் 15 அறிவியல் ஆய்வுக் கூடங்கள் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## IV. நலக் குழுக்கள்

### அ) மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995 மற்றும் திருத்த விதிகள், 2016, விதி 16(1)–இன்படி மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு 20.07.2021 அன்று திருத்தியமைக்கப்பட்டு, இக்குழுவின் முதல் கூட்டம் 19.08.2021 அன்று நடைபெற்றது.

இக்குழு ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரு முறை கூடி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1989 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) திருத்த சட்டம், 2015, ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் இச்சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகள் குறித்து ஆய்வு செய்வதோடு, வன்கொடுமைக்கு ஆளானோருக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் இச்சட்டத்தை செயல்படுத்தும் பல்வேறு அலுவலர்கள் / அமைப்புகளின் பணி / பங்கு குறித்தும் ஆய்வு செய்கிறது.

2022–ஆம் ஆண்டிற்கான இக்குழுவின் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் 12.04.2022 அன்று நடைபெற்றது.

## ஆ) தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் நலன் மற்றும் அவர்களது முன்னேற்றத்திற்கு ஆலோசனை வழங்கும் விதமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் விதி எண்.4(1)–இன்படி பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் 1961–ஆம் ஆண்டு

அமைக்கப்பட்டது. இம்மன்றத்தின் தலைவராக மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் மற்றும் உறுப்பினர்–செயலராக பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களும் உள்ளனர். இம்மன்றத்தில் 3 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 15 அலுவல் சாரா உறுப்பினர்களும், 2 பழங்குடியினத்தைச் சாராத உறுப்பினர்களும் சேர்த்து 20 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மன்றத்தின் பதவிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும். ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரு முறை இம்மன்றத்தின் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

# V. தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம்

தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப்பூ வமான உரிமைகளை பாதுகாக்கவும், அவர்களது முக்கியமான பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டு 13.10.2021 முதல் இயங்கி வருகிறது.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு.சிவக்குமார் அவர்களின் தலைமையில் இயங்கும் இவ்வாணையத்திற்கு ஒரு துணைத் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாணையத்தின் தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

இவ்வாணையம் தற்போது, தாட்கோ தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தால் 700 மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# VI. நல வாரியங்கள்

## 1. புதிரை வண்ணார் நல வாரியம்

ஆதி திராவிட இனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான புதிரை வண்ணார் சமுதாயத்தின் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கென மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 2009–ஆம் ஆண்டு புதிரை வண்ணார் நல வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 12 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆதி திராவிடர் நல ஆணையர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2009–ஆம் ஆண்டு முதல் 2012–ஆம் ஆண்டு வரை ரூ.1.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

## 2. தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்

தூய்மைப் பணிபுரிவோரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து,

அவற்றின் முன்னேற்றத்தை உறுதி செய்திடும் பொருட்டு மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 2007–ஆம் ஆண்டு 'தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்' அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் ஒரு உப தலைவர், 13 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 14 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக தாட்கோ மேலாண்மை இயக்குநர் உள்ளார். இவ்வாரியம், தாய்கோ வங்கி வளாகம், எண்.1, காந்தி இர்வின் சாலை, தாளமுத்து நடராஜன் மாளிகை, எழும்பூர், சென்னை–6 என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தின் மூலம் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2008–ஆம் ஆண்டு முதல் 2010–ஆம் ஆண்டு வரை ரூ.3.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான உதவித் தொகைகள் 2021–2022–ஆம்

ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாரியத்தின் மூலம் நலத்திட்ட உதவித் தொகை வழங்கிடும் பொருட்டு 2021–2022–ஆம் நிதியாண்டில் ரூ.1.53 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 3. பழங்குடியினர் நல வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென பழங்குடியினர் நல வாரியம் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராக கொண்டு 2007–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும் 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பழங்குடியினர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்க 2008–ஆம் ஆண்டு முதல் 2010–ஆம் ஆண்டு வரை ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## VII. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2022–2023–ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூ . கோடியில்)

| வ. எண். | அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1, | தலைமைச் செயலகம் | 11.80 | 0.00 | 0.40 | 12.20 |
| 2, | ஆதி திராவிடர் நலத்துறை | 3,503.96 | 158.04 | 0.00 | 3,662.00 |
| 3, | பழங்குடியினர் நலத்துறை | 351.16 | 256.40 | 0.00 | 607.56 |
| மொத்தம் | | 3,866.92 | 414.44 | 0.40 | 4,281.76 |

**என். கயல்விழி செல்வராஜ்,**
**ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.**



தோடா பூத்தையல் கலையினை பாதுகாத்து மேம்படுத்துவதில் பங்களித்த நீலகிரியைச் சேர்ந்த ஜெய முத்து மற்றும் தேஜம்மா ஆகியோருக்கு இந்திய குடியரசுத் தலைவர் நாரி சக்தி விருதை வழங்கினார்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் 12.04.2022 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் கட்டப்பட்டுள்ள புதிய விடுதிகள் மற்றும் பள்ளிக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11.04.2022 அன்று திறந்து வைத்தார்கள்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2021–ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருதை மேனாள் நீதியரசர் கே.சந்துரு அவர்களுக்கு வழங்கினார்.



தருமபுரி மாவட்டம் வத்தல்மலையில் பழங்குடியினருக்கு விலையில்லா கறவை மாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.




மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 27.10.2021 அன்று சென்னை மாவட்டத்தில் தாட்கோ பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



நீலகிரி மாவட்டம், பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் புனரமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகம்.



தோடர் பழங்குடியினர் வாழ்விடம்.



நாமக்கல் மாவட்டம், களங்காணியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி கட்டடம், (மதிப்பீடு: ரூ.219.45 இலட்சம்).



செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள மேல்நிலைப்பள்ளிக் கட்டடம், (மதிப்பீடு: ரூ.279.90 இலட்சம்).



செங்கல்பட்டு மாவட்டம், பவுஞ்சூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவியர் விடுதிக் கட்டடம் (மதிப்பீடு: ரூ.111.03 இலட்சம்).




நாமக்கல் மாவட்டம், திருப்புலிநாடு – கீரைக்காடு பழங்குடியினர் கிராமங்களுக்கு சாலை அமைக்கும் பணி (மதிப்பீடு: ரூ.279.90 இலட்சம்).




சேலம் மாவட்டம், குண்டூர் – காசிக்கால் பழங்குடியினர் கிராமங்களுக்கு சாலை அமைக்கும் பணி, (மதிப்பீடு: ரூ.110.00 இலட்சம்).

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.